
# உன்னத வாழ்வு?

## கவிதைத் தொகுப்பு



"வெலிப்பன்னை அத்தாஸ்"

# உன்னத வாழ்வு?

## கவிதைத் தொகுப்பு

"வெலிப்பன்னை அத்தாஸ்"

# உன்னத வாழ்வு?

கவிதைத் தொகுப்பு

"வெலிப்பன்னை அத்தாஸ்"

வெளியீடு
**மொடர்ன் ஸ்டடி சென்றர்**
41 B, முஸ்லிம் வீதி
வெலிப்பன்னை

# உன்னத வாழ்வு?

"வெலிப்பன்னை அத்தாஸ்"


நூல் வகை : கவிதைத் தொகுப்பு

நூல் உரிமை : ஆசிரியருக்கு

பதிப்பு ஆண்டு : ஜுன் 2016

பக்கங்கள் : 16 + 72

ஒளி அச்சு : நீதா

முகப்பு வடிவமைப்பு : நீதா

அச்சிட்டோர் : நீதா புத்தகத் தாய் - 077 980 6573

நூல் வெளியீடு : மொடர்ன் ஸ்டடி சென்றர், 41 B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை

விலை : ரூபா. 250.00

ISBN : 978-955-4956-01-8

## முன்னுரை

நண்பர் அத்தாஸ் அவர்களை நீண்ட காலமாகப் பெயர் ரீதியாகவும் நேரிலும் நான் அறிவேன்.

வெலிப்பன்னைப் பாடசாலையில் பணியாற்றிய காலத்தில் சில வருடங்களுக்கு முன்பு அங்கு அழைத்திருந்தார்.

சமீபகாலமாக வகவம் கவியரங்குத் தொடர்ந்து வருகை தந்து எம்முடன் நெருக்கமானவர்.

அவரது படைப்புகளை நூல் வடிவிலும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வழியாகவும் வாசித்திருக்கிறேன்.

இது இவரது முதலாவது கவிதைத் தொகுப்பு என எண்ணுகிறேன்.

இவரைப் பற்றியும், இத்தொகுப்பில் அமையப் பெற்றுள்ள கவிதைகளைப் பற்றியும் யோசித்த பொழுது இரண்டு நிலைகளில் நின்று நோக்க வேண்டும் போல் தோன்றியது ஒன்று நீண்ட காலமாக இலக்கிய உலகில் இயங்கிக் கொண்டிருப்பவர்களின் நிலவரம் அடுத்து குறிப்பாக அத்தாஸின் கவிதைகள் பற்றிய என் பார்வை .

நீண்டகாலமாக கலை இலக்கிய துறைகளில் இயங்கிக் கொண்டிருப்பவர்கள். இயங்கிக் கொண்டிருந்தவர்களின் நிலவரத்தைப் பின்வரும் நிலைகளில் வைத்துப் பார்க்கலாம்.

(அ) நீண்ட காலமாகக் இலக்கிய உலகில் பணியாற்றி இக்காலகட்டத்தில் ஓய்வு பெற்ற மனோநிலையுடன் இருந்து கொண்டிருப்பவர்கள். இவர்கள் தம் கடந்த காலப்படைப்புகளை நூல் வடிவில் கொண்டுவருவதில் ஆர்வமில்லாதவர்கள்.

(ஆ) நீண்ட காலமாக இலக்கிய உலகில் பணியாற்றி இக்காலகட்டத்தில் அவர்களுக்கு அடுத்த தலைமுறையினருடன் தொடர்புடன் இருந்தும் தம்மை upgrade பண்ணிக் கொள்ளாதவர்கள். ஆனால் இவர்கள் தம் ஆக்கங்களை நூல் உருவில் கொண்டு வர ஆர்வமிருந்தும் அதற்கான வசதியும் வாய்ப்பும் இல்லாதவர்கள். (இத்தகையவர்களின் தொகை சமீபகாலமாகக் குறைந்து வருகிறது. இலக்கிய புரவலர் ஹாஸிம் உமரின் புத்தக பூங்கா வழியாக இதுவரை காலம் தம் ஆக்கங்களை வெளியிடாத மூத்த படைப்பாளிகளின் படைப்புகளை நூலாக வெளியிட்டுக் கொடுத்தல் போன்ற பணியின் மூலம்)

(இ) நீண்ட காலமாக இலக்கிய உலகில் பணியாற்றி இக்காலகட்டத்தில் அவர்களுக்கு அடுத்த தலைமுறையினருடன் தொடர்பைப் பேணி தம்மையும் upgrade பண்ணி , ஏதோ வழியில் தம் படைப்புகளை நூல்களாக வெளியிட்டு, சலிக்காது களைப்படையாது இலக்கிய உலகில் இயங்கிக் கொண்டிருப்பவர்கள்.

நண்பர் வெலிப்பன்னை அத்தாஸ் அவர்கள் மேலே குறிப்பிட்ட நிலைகளில் மூன்றாவது நிலையைச் சார்ந்தவர்.

61 கள் தொடக்கம் இலக்கிய உலகில் பிரவேசித்து இன்று வரை சிறுகதை , கட்டுரை, சிறுவர் பாடல், கவிதை என்று பல்வேறு வடிவங்கள் வழியாகப் படைப்பாளியாக இயங்கிக் கொண்டிருப்பவர்.

ஒரு படைப்பாளி தனித்துவமானவராகவும் ஒரு முத்திரை கொண்டவராகவும் மாறுவதற்குக் கால அளவில் அவர் பெற்றுக் கொள்ளும் அனுபவம் வாசிப்பு, தேடல், அவரது தொடர்புகள், போன்றவை காரணங்களாக அமைகின்றன. அந்த வகையில் 61 கள் தொடக்கம் நண்பர் அத்தாஸ் , ஏ இக்பால் , பஸீல் காரியப்பர், பேராசிரியர் கைலாசபதி , பேராசிரியர் சிவத்தம்பி, சில்லையூர் செல்வராஜன், அ. ந. கந்தசாமி, நீர்வை பொன்னையன், பிரேம்ஜி, அபூதாலிப், அப்துல் லத்தீப், எச். எம். பி. முஹிதீன் , செ. கணேசலிங்கன், கே. எஸ். சிவகுமாரன், அ. ஸ. அப்துஸ் ஸமது, ப. ஆப்டீன் போன்றவர்களுடன் கொண்டிருந்த, கொண்டிருக்கும் தொடர்பு அவருக்கு மிகவும் பயன்மிக்கதாக அமைந்தது எனலாம.

இவர்களது தொடர்பின் காரணமாக (ஏ. இக்பால் அவர்கள் மூலம்) இந்த நாட்டின் நவீன தமிழ் இலக்கியத்தின் போக்கை மாற்றிய, நிர்ணயித்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தொடர்பு அவருக்கு கிடைக்கிறது. மேலே குறிப்பிட்டவர்கள் வெறுமனே ஈழத்து நவீன இலக்கியகாரர்களின் பட்டியலுக்குரியவர்கள் மட்டுமல்ல ,ஏதோ விதத்தில் இ. மு. எ. சவுடன் தொடர்பு கொண்டவர்கள். இயங்கியவர்கள். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை பொறுத்தவரை அதுவும் வெறுமனே ஓர் எழுத்தாளர் சங்கமல்ல. அது சமூக அரசியல் கருத்தியலுடன் மேலே குறிப்பிட்டது. போல் இந்த நாட்டின் நவீன தமிழ் இலக்கியத்தின் போக்கை மாற்றிய , நிர்ணயித்த ஓர் இயக்கம்.

அத்தகைய இயக்கத்தின் அவ்வியக்கத்துடன் சேர்ந்து இயங்கிய மேற்குறிப்பிட்டவர்களின் தொடர்பின் காரணமாக அவ்வியக்கத்தினதும் இயக்கம் சார்ந்தவர்களினதும் படைப்பிலக்கியப் போக்கின் தாக்கம் இவரது எல்லாப் படைப்புக்களிலும் தெரிகிறது இத்தொகுப்பில் அமைந்துள்ள கவிதைகளிலும் அப்படித்தான்.

மேற்குறித்தவர்களின் படைப்பிலக்கியப் போக்கு என்கின்ற பொழுது இ.மு.எ.ச இயக்கம் கொண்டிருந்த கருத்தியல் படி ஒர் இலக்கியப் பிரதியின் உருவம் என்பதைவிட, உள்ளடக்கமே முக்கியம் என்பதற்கு இணங்க முழு மனித சமூகத்தைப் பற்றிய அக்கறையும் கரிசனை மிக்க உணர்வும் இவரது படைப்புக்களில் பரவி இருக்கிறது.

இ.மு.எ.ச க்கு எதிரான கருத்துக் கொண்டவர்கள் அவ்வியக்கம் உள்ளடக்கத்திற்குக் கொடுத்த முக்கியத்துவம் அளவுக்கு உருவத்திற்கு கொடுக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டினை அவ்வியக்கத்தின் மீது வைத்து வருகின்றனர் . அது பிழையான கருத்து இ.மு.எ.ச வைப் பொறுத்தவரை ஒர் இலக்கியப் பிரதியின் உருவத்தை மட்டுமே முன்னிறுத்தி, அதுவே ஓர் உன்னத அனுபவம் என்று சொல்லிக் கொண்டவர்களுக்கு எதிராக இருந்ததே தவிர, ஓர் இலக்கியப் பிரதியின் உருவத்தின் அழகியலை முற்றும் முழுதுமாக நிராகரித்த இயக்கமல்ல.

அதனால்தான் என்னவோ நண்பர் அத்தாஸுக்கு தன் கவிதைப் படைப்பு பிரதிகளின் உருவத்தை பற்றிய அக்கறை. அதீத பிடிப்பு இல்லாத நிலையில், ஒவ்வொரு கவிதைப் பிரதியின் உள்ளடக்கம் பற்றிய பிரக்ஞை அவரது சகல கவிதைப் பிரதிகளில் மேலோங்கி நிற்கிறது.

நவீன இலக்கியப் பிரதியைப் பொறுத்தவரை ஒவ்வொரு இலக்கியப் பிரதியின் உருவத்தை அதன் உள்ளடக்கமே நிர்ணயம் செய்கிறது என்பதற்கேற்ப, அத்தாஸின் ஒவ்வொரு கவிதைப் பிரதிக்கான உருவத்தை அக்கவிதைக்கான உள்ளடக்கமே நிர்ணயம் செய்து இருக்கிறது, அக்கவிதை மரபுக் கவிதையா? புதுக்கவிதையா? என்ற விசாரத்தையும் கடந்து.

ஒட்டு மொத்தமாக இத்தொகுப்பில் அமைந்துள்ள கவிதைப் பிரதிகளை ஒரு சேரப்பயிலுகின்ற பொழுது, அத்தாஸ் தனக்கான ஒரு கவிதை உருவத்தை உருவாக்கி இருக்கிறார் அந்த உருவக்கட்டமைப்பானது அவரது சகல கவிதைகளில் வெளிப்படும் "தொனி"யினால் உருவாக்கப்பட்டு இருக்கிறது.

மொழியை ஊடகமாகக் கொண்ட ஒவ்வொரு இலக்கியப் பிரதியிலும் அப்பிரதிக்கான படைப்பாளியின் "தொனி" வெளிப்படும். அத்தொனியானது பிதுங்கலாகத் தெரியவில்லை. அந்தப் பிரதிக்குள்ளே abstract இருக்கும். ஆழ்ந்து அப்பிரதியைப் பிரித்துப் பார்த்தால் அது தெரியவரும் அவ்வாறான தொனியே அத்தாஸின் கவிதைப் பிரதிகளின் பொதுப் பண்பாக இருக்கிறது. அதுவே அவரது தனித்துவமாக இருக்கிறது.

நண்பர் அத்தாஸ் கவிதையில் காட்டும் தேடலையும் அனுபவத்தையும் விரிவாக்கிக் கொள்ளுமிடத்து இன்றைய கவிதை இயக்கத்துடன் தன்னை மேலும் ஆழமாகவும், அகலமாகவும் இணைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அவ்வேளை அவருக்கான தனித்துவம் இன்னும் கூர்ப்பாக ஈழத்துத் தமிழ்க் கவிதை வாசக விமர்சன உலகின் கவன ஈர்ப்புக்கு ஆட்படும் என்பது எனது நம்பிக்கையும் எதிர்பார்ப்புமாகும்.

**"மேமன் கவி"** 23 - 4 - 2016

memonkavi@gmail.com

# அணிந்துரை

இன்றைய இலக்கிய உலகில் நூல் வெளியீடுகள் ஏராளமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொருவரும் தங்கள் மனத்து வெளிப்பாடுகளை இலக்கியமாக வெளியிட்டு தம்மை இலக்கியவாதிகளாக வெளிப்படுத்துகின்றனர். அப்படி நோக்குகையில் வெலிப்பன்னை அத்தாஸ் அவர்கள் அறுபதின் ஆரம்பத்தில் எழுத ஆரம்பித்தவர். ஆரவாரமில்லாத அமைதியான மனிதர் . வெலிப்பன்னை என்ற ஊருக்கு இலக்கியத்தினூடாகப் பெயர் பதித்து வைத்தவர். இவர் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் நிரம்பவே எழுதி வருகிறார். ஆரம்பகாலங்களில் புனைப்பெயர்களில் எழுதியுள்ளபோதும் இவரை "வெலிப்பன்னை அத்தாஸ்" என்ற பெயரிலேயே இலக்கிய உலகம் நன்கறிந்துள்ளது.

ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராய், அதிபராய், மாணவ உலகின் வழிகாட்டியாய் திகழ்ந்தவர் தனது இலக்கியத்துறை வழிகாட்டிகளாக கவிஞர் ஏ. இக்பால், பஸீல் காரியப்பர் ஆகியோரின் நட்பும் இலக்கிய வானில் எழுதத் தூண்டியதாக என்னால் அவதானிக்க முடிந்தது.

இவரது கவிதைகள் அனைத்தும் இலகுவாக வாசித்துப் புரிந்துகொள்ளும் படியாக அமைந்துள்ளன. சமூகம் பற்றி நிறையச் சிந்தித்துத் தனது கவிதைகளை வடித்துள்ளார். அதேவேளை இறைத்தூதர் நபிகள் நாயகம் பற்றிய கவிதைகளும் சிறப்பைக் கொடுக்கின்றன.

கவிஞர் அத்தாஸ் அவர்கள் வாழ்வின் தரிசனங்களை உயிர்ப்போடு கவிதைகளாகப் படைத்துள்ளர். தாய் ,கல்வி ஆசிரியம் என்பவற்றையும் தொட்டு இவர் கவிதைகள் ஊற்றெடுக்கிறது.

கவிதைகள் ஒரு வாசகனின் மனதில் பதியவேண்டுமென்பதை நோக்காக கொண்டு இவரது கவிதைகள் பயணிக்கின்றன. பூவும் கனியும் என்ற சிறுவர் பாடல்களை ஓசை நயத்தோடு தந்தவர், கவியரங்குகளில் மரபோடு கவிபாடும் வல்லமைமிக்கவர்.

இவரது "உலகநியதி" என்ற கவிதையூடாக

**உயர்ந்தவர் தாழ்வதும்**
**தாழ்ந்தவர் உயர்வதும்**
**உலக நியதி.........**

என ஆரம்பித்து உலக அரசியல்வாதிகளின் வாழ்வினை எடுத்தாள்கிறார். இதே போன்று "மெய்ஞ்ஞானம்" என்ற கவிதையினூடாக விஞ்ஞானத்திற்கும் மெய்ஞ்ஞானத்திற்கு-மிடையே உள்ள வேறுபாடுகளையும் கவிதையால் சொல்கிறார். இப்படியாக இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் மானிட வாழ்வைப் பதிவு செய்கிறது.

ஒரு படைப்பாளியின் எழுத்தாளுமைக்குப் பத்திரிகைகள் சஞ்சிகைகளின் ஊக்குவிப்பு முக்கியமானது. அப்படி நோக்குகையில் "வெலிப்பன்னை அத்தாஸ்" என்ற படைப்-பாளியை "கவிஞர்" என்ற அந்தஸ்துக்கு அவை வளர்த்துள்ளமை பாராட்டுக்குரியது. இக் கவிதை நூலில் வரவானதும் பாராட்டுக்குரியது.

**வதிரி. சி. ரவீந்திரன்**

**568/2/1, அளுத்மாவத்தை வீதி**
**கொழும்பு - 15**
**25 - 4 - 2016**

## வாழ்த்துரை

இலக்கியமென்பது இலட்சியப் பாங்கானது. அவை எத்தனையோ உருவங்களாகக் காணப்பட்டாலும், கவிதை வடிவமே கலைக்கு உரிய–தாகின்றது, தமிழிலே கவிதை வடிவமே முதன்மைப்பட்டாலும் ஆரம்பம் இலக்கண உருவமாகி இன்று சொல் அடுக்கு, இசைவடிவம், புதுப் பொலிவு பரந்து சிறந்து விளங்குவதைக் காணலாம். இன்றைய புதுவடிவத்துள் மனித உணர்வை, ஒழுக்கச் செறிவைப் புகுத்தி வாழ்க்கையை வளப்படுத்தும் முறைக்கு வாசகர்களைப் வழிப்படுத்தலாம்.

இத்தொகுதியில் அறுபத்து மூன்று கவிதைகள் எழுத்து, சொல், சீர், அடி யாவற்றுடனும் இலகு தமிழில் எழுந்து நிற்கின்றன. அவை யாவும் மனித வாழ்வின் இயல்புநவிற்சியுடன் இணைந்து நிற்கின்றன. இத்தொகுதியில் ஆசிரியரது வளர்ச்சியையும் காணமுடிகின்றது. இலக்கியப்பாதையில் இணைந்து நின்று எண்ணங்களைத் தூய்மைப்படுத்தி எழுந்துள்ள இக்கவிதைகளைத் தந்த ஆசிரியர் கவிஞர் அத்தாஸ் அவர்களை வாழ்த்துவதோடு அவரது இலக்கிய உச்சம் வளர்ந்து உயர மீண்டும் வாழ்த்துகிறேன்.

**கவிஞர் ஏ. இக்பால்**
**(இலக்கிய மணி கலாபூசணம்,**
**இலக்கிய வாருதி இலக்கிய விற்பன்னர்,**
**தமிழ்மாமணி, காலதீர்த்தாபிமானி)**

**"ரிபாயா மன்ஸில்"**
03 - 5 - 2016

வல்ல நாயனுக்கே புகழனைத்தும் அல்ஹம்துலில்லாஹ்!

வெலிப்பன்னை "மொடர்ன் ஸ்டடி ஸென்டர்" நிறுவனத்தின் வேண்டுகோளை ஏற்று "உன்னத வாழ்வு?" எனும் இக் கவிதை நூலை வெளியிட எமக்கு அனுமதி தந்த நூலாசிரியர் – வித்யா நிகேதன, காவ்ய ப்ரதீப, (கவிச்சுடர்) கலாபூஷணம், சமாதான நீதவான் "வெலிப்பன்னை அத்தாஸ்" அவர்களுக்கு முதற்கண் நன்றிகளைக் கூறிக்கொள்கிறோம். அல் ஹாஜ் ஏ.எச்.எம். அத்தாஸ் எனும் பெயருக்குறிய இந்நூலாசிரியர் பாடசாலையில் 1ந் தர அதிபராகக் கடமை புரிந்து ஓய்வு பெற்றவர். மத்துகம தினகரன் நிருபராக 10 வருடங்களுக்கு மேல் கடமை புரிந்ததன் நிமித்தம் பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டு அத்தாட்சிப் பத்திரம் "தினகரன்" ஆசிரிய பீடத்தால் வழங்கப்பெற்றவர். கொழும்புப் பல்கலைக்கழக ஊடகத்துறை டிப்ளோமா பட்டதாரியுமாவார்.

இந்நூலாசிரியர் இத்துடன் ஆறு (06) நூல்களை வெளியிட்டுள்ளார். நாம் பதிப்பித்த, ஆசிரியரின் நூல்களை வெளியிட முன்வந்தமை, வாசகர்கள் பயன் பெறுவதற்கு நாம் காரணகர்தாக்கள் ஆகின்றோம் என்பதன்றி வேறன்று.

இந்நூல் வெளியீட்டில் எம்முடன் ஒத்துழைத்து நின்ற சகலருக்கும் நன்றிகளைச் சமர்பிக்கிறோம். உரிய விதம் நூலை அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும் எமது நன்றிகள். நாம் வெளியிட்ட நூலாசிரியரின் ஏனைய நூல்கள் பெற்ற வரவேற்பைப் போல "உன்னத வாழ்வு?" கவிதை நூலுக்கும் வரவேற்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் விடை பெறுகின்றோம்.

நன்றி

**செயலாளர்,**
**மொடர்ன் ஸ்டடி சென்றர்**

**41 B, முஸ்லிம் வீதி**
**வெலிப்பன்னை**
**09 - 05 - 2016**

## என்னுரை

வல்லவனாம் அல்லாஹ்வின்
வான் புகழும் நாமதைப்
போற்றிப் புகழ்ந்து துதித்து
ஆரம்பம் செய்கின்றேன்.

இறைத்தூதர் நபி முஹம்மத் (ஸல்) அன்னவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக!

"உன்னத வாழ்வு?" எனும் இக்கவிதை நூல் எனது ஆறாவது வெளியீடாக அமைகிறது. ஏற்கனவே "பூவும் கனியும்" என்ற பெயரில் சிறுவர் பாடல்கள் வெளியிட்டேனாயினும் கவிதைத் தொகுப்பு ஒன்றை வெளியிடும் முதற் சந்தர்ப்பம் இதுவாகும்.

நான் எழுதிய முதற்கவிதையைத் தினகரன் – "புதன்மலர்" பகுதிக்கு அனுப்பி வைத்தேன். அது 1963 ஜனவரி 09 ந்திகதி "சிரஞ்சீவியாய் அமைய அருள் செய் இறைவா" என்ற தலைப்பில் (தினகரன் புதன்மலர் பகுதியில்) பிரசுரமானது. அன்று தொட்டு இன்று வரை நான் எழுதிய கவிதைகள் நூற்றுக் கணக்கில் உள்ளன. சேகரித்து வைத்திருந்த அத்தகைய எனது கவிதைகளுள் அறுபத்து மூன்று கவிதைகளை இத்தொகுப்பில் இடம் பெறச் செய்துள்ளேன்.

எனது எழுத்துலகப் பிரவேசம் 1961ம் வருடம் எனினும் கவிதை ஒன்றை முதலில் எழுதியது 1963 ல் ஆகும். அம்முதற் கவிதை இந்நூலில் இடம்பெறுகிறது. சிறுவர் பாடல்கள் தொகுப்பை வெளியிட்டது போல 1969ல் "உணர்வூட்டும் இஸ்லாமிய கீதங்கள்" எனும் நூலை "பைத்துல்முபாரக்" நூல் நிலையம் மூலம் "இளங்கலைஞன்" என்ற புனைப் பெயரில் வெளியிட்டுள்ளேன்.

"உன்னத வாழ்வு?" என்று இந்நூலுக்கு தலைப்பிட்டதில் ஒரு நோக்கமுள்ளது. உன்னத வாழ்வு பற்றி ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும் என்பது எனது வேணவாவாகும். அத்துடன் வாழ்வின் சிறப்பம்சங்களைத் தெரிந்து கொண்டு அவற்றைப் பேணி அனுசரிக்க வேண்டியதும் மனிதனின் கடப்பாடாகும். இதற்கு வழிகாட்டும் ஒரு சில கவிதைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. கவிதை படிப்பவர்கள் சிந்தித்து தெளிவு பெறுபவர்கள் ஆவர். கவிதையை இலயிப்பது போலவே அதன் கருத்துக்களில் ஊன்றி நின்று நுண்மையாக அவதானிப்பார்கள். எனவே இக்கவிதைத் தொகுப்பு வாழ்வில் பயன்படும் கருத்தைச் சொல்வதாக அமைய வேண்டும் என்பது எனது பெரு விருப்பமாகும்.

இக்கவிதை நூலுக்கு முன்னுரை, அணிந்துரை, வாழ்த்துரை வழங்கிய மூவரும் எனது நன்றிக்குரியவர்கள். இலக்கியமணி கலாபூஷணம் கவிஞர் ஏ. இக்பால் அவர்கள் வாழ்த்துரை எழுதி வழங்கினார். அத்துடன் "மேமன்கவி" அவர்கள் முன்னுரை எழுதி ஆங்கே பூர்வபீடிகையாகச் சில கருத்துக்களை முன்வைத்துள்ளார். திரு. வதிரி சி. ரவீந்திரன் அவர்கள் அணிந்துரை வழங்கி நின்றார். இவர்கள் மூவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அத்துடன் நூலை வெளியிட முடிவெடுத்ததும், முன்வந்து தங்கள் நிறுவனத்தால் அச்சிட்டுத் தருவதாகக் கோரிக்கை விட்டபடி நின்ற மொடர்ன் ஸ்டடி சென்றர் நிறுவன உறுப்பினர்களுக்கும் செயலாளர் எம். ஏ. எம். வை. அரபாத், இந்நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் ஆசிரியை எப். ஸப்ரூன் எம். அஸாத் ஆகியோருக்கும் நன்றிகலந்த பாராட்டுக்கள்.

தேவையான ஒத்துழைப்பு வழங்கிய துணையாள் நபீஸா அத்தாஸ், கணனி மூலம் ஒத்துழைப்பு நல்கிய மருமகன் ஜனாப் எம். எம். எம். அஸாத் (சட்டத்தரணி) ஆகியோருக்கும் நன்றிகள். நூலின் அட்டைப்படத்தை வடிவமைத்து, நூலை ஒழுங்குற அச்சிட்ட நீதா புத்தகத்தாய் அச்சகத்தாருக்கும் நன்றிகள் உரித்தாகும். நூலை வாங்கிப் படிப்பவர்களும் எனது நன்றிக்குரியவர்களே! என்பதைப் பகர்ந்து விடை பெறுகிறேன்.

நன்றி

**"வெலிப்பன்னை அத்தாஸ்"**

**41 , "அரபாத் அகம்"**
**முஸ்லிம் வீதி,**
**வெலிப்பன்னை**
**10 - 05 - 2016**

# சமர்ப்பணம்

வெலிப்பன்னையில்
பத்திரிகைத்துறை – எழுத்தாக்கம்
என்பவற்றில் முன்னோடியாக நின்று
நான் சிறு பராயத்தில் காலஞ்சென்ற
எனது சிறிய தந்தை விதானையார்
**ஹஸன் மரிக்கார் அப்துல் கஹ்ஹார் (மௌலவி)**
அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

## உன்னத வாழ்வின் உள்ளே ........................................


உரிமையாளன் இறைவனே! 1

சிரஞ்சீவியாய் அமைய அருள் செய் இறைவா! 2

அல் குர்ஆன் 3

உத்தம நபிகளார் தோன்றினார் 4

என் தாய் 6

உன்னத வாழ்வு? 7

அறிந்தும் அறியாததும் 8

ஆதிக்க சக்தி 9

மனிதனைச் சுகதேகியாக்கி 10

தன்னைத் துய்தாக்கி 11

முன்னேற்ற வழி 12

இனிது 13

ஏமாற்றுக்காரர் 14

மனித மிருக முரண்பாடு 15

செல்வம் 17

வழி செய்வாய்! 18

மனிதன் கடன்காரன் 19

கோட்பாடு 20

இனி என்று காண்பேன்? 21

வடபுல முஸ்லிம்களுக்காக 22

சுமைகள் 23

உயர்ந்த பூமி மயானம் 25

வீண் பித்தலாட்டம் 26

கிண்ணியாப் பாலமும் பாரிய மாற்றமும் 27

வல்லரசும் வலுக்குன்றும் 29

ஆசை 30

உலக நியதி 31

புதுவருடம் – முஹர்ரம் முதல் நாள் 32

முன் எச்சரிக்கை தேவை 34

கால்கள் 36

குத்தூஸ் நானாவும் மனைவியும் 37

நடு நிலையாளர் 39

அபூஜஹ்ல் இன்று 40
மெய்ஞ்ஞானம் 41
முஸ்லிமாய் வாழ்ந்தால் 42
நல்ல எதிர்காலம் அமைந்திட 43
மாண்புமிகு துணைவி 44
தாய் ஆவாள் பெண் 45
கல்வி பெற்றால் 46
கல்வி – சௌக்கியம் 47
கத்திக்கு ஒரு புத்தி 48
இரங்கல் 49
நான் – எனது 50
வெற்றிலை வேண்டாம்! 51
ஆசிரிய வாண்மையினரே! 52
சுகபோகம் வேண்டாம்! 53
கல்வி வளர ஆவன செய்க! 54
இறையச்சம், ஈமானின்றேல் சோதனைகள், அனர்த்தங்கள் 56
பயிர் தரும் பாடம் 57
இறைகட்டளையைப் பிசகற நிறைவேற்றி 58
அருள் மிகு ரமழான் 59
தேவை நல்லொழுக்கம் 60
அன்றும் இன்றும் 61
வாழ்வு – இருபார்வை 62
இறைவன் மனிதன் சமமன்று 63
மாற்றங்கள் 64
சோம்பல் 65
வங்கியில் இலட்சம் பல 66
கனிவாகக் கழித்திடுக! 67
மனித மனம் 68
காலம் 69
முன்னோரைக் கனம் பண்ணு... 70
ஷைத்தானுக்கு எதிரான போராட்டம் 71
இறைவன் உள்ளான் 73

# 1 உரிமையாளன் இறைவனே!

அனைத்யையும் படைத்தவன் இறைவன் ஒருவன்
அனைத்துக்கும் உரிமையாளன் அவனே ஆவான்
ஆயினும் நம்மவர் நமதெனத் தமதெனப்
பயமுறுத்தல் காட்டி ஒருவரை யொருவர் பேசுவோர் ஆயினர்

இறையோன் உரிமையைக் கொண்டவன்
இகத்தில் உள்ளோர் இரவல் பெற்றனர்
இகம் மீதில் சுகித்து விட்டுச் செல்வோர்
இவையனைத்தும் தம் "முதுசம்" என்றும் வாதம் செய்தனர்

உண்மைச் சொந்தம் இறைவன் கொண்டும்
தன் பொருள் தனதே அனைத்தும் எனும் கொள்கை
எள்ளளவும் "இறை"யிடம் இல்லை அஃதேன்?
அனைத்துக்கும் எவனோ உரிமை பேசுவது அவனும் அறிவான்

வல்லமையாளன் இறைவன் ஒருவனே ஆயினும்
வல்லமை காட்டிச் சாதிக்க முனையவும் இல்லை
எல்லாம் எனதே எனச் சுருட்டிடக் கருதவும் ஆகா
வல்லான் தன்னை நாம் ஏன் சிந்திப்பதுமில்லை?

பொல்லா மனிதனாய்ப் புன்மை நெறியில்
பொல்லாங்கு கொண்டு பகைத்தல் பேதைமை
வல்லான் அவனை வாழ் நாளெல்லாம் துதித்து
நல்ல நெறியைப் பேணிடல் நம் கடன்

- *நவமணி*

## ௨ சிரஞ்சீவியாயமைய அருள் செய் இறைவா!

பாவொன்று செய்திட வேண்டும்
பாங்காகப் பாடிட வேண்டும்
பாராட்டும் பெற்றிட வேண்டும்
பாவலனாய் மாறிட வேண்டும்

கருப் பொருளொன்று உதித்திட வேண்டும்
கண் முன்னது தெரிந்திட வேண்டும்
கவர்ச்சியையது தாங்கிட வேண்டும்
கரும்பாயது இனித்திட வேண்டும்

சிந்தனையே சிறந்திட வேண்டும்
சிறப்பையே தந்திட வேண்டும்
சித்தமே மகிழ்ந்திட வேண்டும்
சிரஞ்சீவியாயமைய அருள் செய் இறவைா!

- *தினகரன்*

# 3 அல்குர்ஆன்

உயர்வின் ஊன்றுகோல் அல்குர்ஆன்
உண்மைகள் பகர்ந்திடும் அல்குர்ஆன்
உலகினை வென்றிட ஓதிடுவோம்
உன்னத வழியதில் சென்றிடுவோம்

கோதிலா வழிமுறை தத்துவங்கள்
குவிந்துள்ள விஞ்ஞான அற்புதங்கள்
பரவலாய் நபிமார் சரித்திரங்கள்
வரிசையாய்க் கூறும் அல்குர்ஆன்

பொய்யாம் உலகின் இயல்புதனை
வகுத்துத் தொகுத்துச் சொல்வதுடன்
பொருளும் வளமும் பெறும் வழிகள்
பண்பாய் உணர்த்திடும் அல்குர்ஆன்

நேரிய சீரிய வழிதனில்
நேராய் நடந்து வாழ்கை தனில்
சித்தியும் நமக்குக் கிடைத்திட்டால்
சுவனமே பரிசு எனும் அல்குர்ஆன்

உண்மை பொய்யைப் பகுத்தறிய
உறுதியாக உணர்த்திடும் அல்குர்ஆன்
ஓதிட உயர்ந்திட ஒன்றிணைவோம்
ஓரிறை தந்தான் போற்றிச் செய்வோம்.

- விடிவெள்ளி

# 4 உத்தம நபிகளார் தோன்றினார்

உலகத்தை உய்விக்க
உத்தம நபிகளார் தோன்றினார்
உன்னதமான முன்மாதிரி
வாழ்வொன்றை
நம்மவர் மத்தியில்
காட்டியே நின்றிலங்கி
நவின்றிட்ட நன்மொழிகள்
நமக்கின்றும் பயனன்றோ!
இறை மறை "அல்குர்ஆன்"
கட்டளையதில்
மறை வாழ்வு வாழ்ந்து
காட்டிப் போதித்த
மா நபியை "ரஹ்மத்"
ஆகவே நானிலம்
மாண்புறக் கண்டு கொண்டது
ஓர் உயர்வன்றோ?

சீர் குன்றித் தவித்திட்ட
அரேபியா நாட்டினில்
பார் தன்னில் மத்தியாம்
மக்கமா நகர் தன்னில்
பேரான முஹம்மது
நன்னபி புவிவந்த
பொன்னான நாள் நமக்கது
பெருநாளன்றோ?

தீன் எனும் இஸ்லாம்
அரபு நாட்டினில் தீபமாய்
தூய ஒளிவிட்டுப் பிரகாசிக்க
ஏந்தலர் வழியமைத்தார்
பருவ முதிர்வு கண்டே
முழு உலகிலும் பின்பற்றும்
பூரண நிறைவு தரும் மார்க்கம்
இஸ்லாம் என்றாச்சு!

உலகின் நாற்றிசை வாழ்
மக்கள் பலரும்
பலமாய்ப் பிடித்திருக்கும்
மார்க்கம் இஸ்லாம்
நலமாய் அமைய
நாயனும் நாடினான்
நமக்கெல்லாம் ஈடேற்றம்
தருவது இஸ்லாமன்றோ?

இகத்தினில் மார்க்கம்
இஸ்லாம் என்றானதும்
இனிதாய் நமக்கது
பெருமையை தருவதாம்
நலமான நபி வழி
நாடியே கண்டிங்கு
துலக்கமாய் நபி
புகழ் பாடியே துதித்திடுவோம்!

- *ஞாயிறு வீரகேசரி*

# 5 என் தாய்

என்னை ஈன்றெடுத்த என் தாயின்
முன்னைய நினைவுகளை இரை மீட்டிப் பார்க்கின்றேன்
சொல்லால் காட்டிட ஆகாத் துன்பத்தை சுமந்தவள்
சுமையாகப் பத்து மாதம் சுமந்து ஈன்றெடுத்ததொரு பாடு
சுமையாய்க் கண் விழித்துப் பார்த்திருந்ததொரு பரிவு
உதிரத்தைப் பாலாய் ஊட்டி வளர்த்ததொரு கனிவு
பிள்ளை காலத்தில் கல்வியூட்டியதொரு மேன்மை
பின்னிப் பண்பு குணவொழுக்கம் தந்ததொரு வாண்மை
வறுமை வாட்டிடினும் ஊண் உடை குறையாது வழங்கிடற்கு
பொறுமை கொண்டு பல துயர்கள் பட்டதுண்மை
பெரிதாகிக் கற்ற போதும் தேவையெல்லாம் நிறைவு செய்ய
பட்டினி கிடந்தும் பலபேரின் உதவி பெற்றும்
கட்டிலில் நோயிருந்த தந்தையைப் பேணியும்
கடமை எனக் கொள்கை பூண்ட அன்னையை
உடைமையாக அடியேன் பெற்றிடற்கு என்ன தவம் செய்தேன்?
இன்றைய உயர் நிலையைப் பேராய் நான் அடைந்திடற்கே
என்தாய் அவள் செய்த தியாகங்கள் எல்லாம்
மண் மூடிப் போக விட முடியாது என்பேனே!
என்றென்றும் பெயர் கூறும் படியானதொரு
சான்றாதாரம் நான் வைத்திட வேண்டுமன்றோ?
கல்லால் அமைத்திடவோ நூலாய் வடித்திடவோ
அல்லாது என்றென்றும் அவள் பெயரால் பயன்தர வேண்டும் அது

*- ஞாயிறு தினக்குரல்*

# 6 உன்னத வாழ்வு?

உலகில் உதித்த மனித இனம்
உன்னத வாழ்வை நாடிச் செயல்படுகிறது
உன்னத வாழ்வு தான் ஏது? என நோக்கின்
உண்மையில் உன்னத நிலை அடைந்தோமா? என்பது கேள்வி

சுகபோகம் உல்லாசம் இதுவே உன்னதம் என்பாருளர்
அக மகிழ்ந்து ஆட்சி அதிகாரம் செலுத்திடல் சிலரின் உன்னதம்
மாடமாளிகை கூட கோபுரம் அமைத்து வாழ்ந்திடல் சிலர் நாட்டம்
இடம், காணி , சொத்து தேடுதல் சிலரின் மகத்துவம்

ஆற்றல் உத்தியோகம் பெறுதலை நாடுவோர் சிலர்
கூடிக் குலாவி மனைவி, குழந்தை அன்பு வாழ்வு சிலர் விருப்பு
மனிதனை மனிதன் ஏய்த்து வாழ்தலிலும் இன்பம் காண்பர் சிலர்
மனிதனைச் சுரண்டி வாழ்தலும் அப்பாங்கில் உள்ளதே!

உலகில் பல்வேறு உன்னதம் மனிதன் பெற்றிடினும்
பலரின் வாழ்வுக்குச் சிலர்வாழ்வு உலை வைத்திடவும் காண்கிறோம்
சீரிய வாழ்வெனின் உன்னதம் காணல் எனின்
பெருமை பெறுதலும் உலகில் உயர்வு காண்பதும் அன்று என்பேன்

தற்காலிகத் தங்குமிடம் உலகு என்பதே உண்மை
தூயவன் இறைவனுக்கு வகை சொல்லல் கடனாகும்
தாற்பரியம் பெற்ற சுகம் அனைத்தும் அடங்கிவிடும்
துறந்து உலகு நீங்கும் நாள் அனைவருக்கும் உரிய தொன்று

இறையோனின் வல்லபமே ஈற்றில் ஓங்கி நிற்கும்
இனியன இறைவிருப்பில் காண்பதே மோட்சம் தரும்
மாட மாளிகை வாழ் வெனினும் ஆறடி மண்ணறை உரியதாகும்
மாய வாழ்வொதுக்கி உன்னதம் ஏதெனத் தெளிதல் தேவை

- எங்கள் தேசம்

# 7 அறிந்ததும் அறியாததும்

வரும்போது யானறியேன்
வருமுன்னரும் அறியேன்
வந்து முடிந்த பின்னே
வந்திருப்பதை அறிவேன்

கருவுறும் முன்னைநிலை
கருவுருவிவும் அறியேன்
எவ்விடத்தோ எப்படியோ
இருந்திருப்பதை அறிவேன்

செல்லுமிடம் யானறியேன்
செல்வதெவ்வாறு என்றறியேன்
செல்லுவதை யானறிவேன்
சென்ற பின்போது அறியேன்

ஒவ்வொன்றை யுமறிய
ஒருவழி உண்டறிவேன்
உண்மையதில் உண்டென்று
உணர்வதல்லால் வேறறியேன்.

*- கலை அமுதம் 1967*

# 8 ஆதிக்க சக்தி

கடல் பொங்கி எழுந்து அலைகளாய் உயர்ந்து வீழ்ந்து
நாடு நகர் எங்கும் புகுந்து அழிந்தும் ஓயுது
தன் நிலையில் அமைதியாய் இருந்த பூமித்தாய்
துணிவை இழந்து நடுநடுங்கி அதிர்வினால் அழிவை ஏற்குது

மனிதனுக்கு உதவிடும் தீ அகோரமாய்ப் பரவியே
அனைத்தையும் புசித்து வீடு, கடை எனத் தொடருது
இதமான தென்றலாய் நுகரும் காற்றும் சடுதியாய்
இகமதைப் புரட்டிடச் சுழன்று வேகமாக வீசி அழிவை ஆக்குது

இவையெலாம் வாழ்வில் கண்டும் கேட்டுமுளோர்
இயக்குபவனின்றி இயங்கும் செயல் எனக் கொள்வதா?
உலகில் செயற்பாடு எதுவும் இயல்பாய் நடந்திடும் என்பதா?
அலகு ஒன்றின் செயலை அலசினால் காரணகர்த்தா துலங்கிடும்

அவ்வாறெனில் இயற்கை நிகழ்வு என்பதுதான் ஏது?
எவனோ நின்று இயக்குகிறான் என்பதே யதார்த்தம்
எதனையும் சிந்திக்க முனைந்திட்டால்
தெளிவு பிறந்திடும்

ஆதிக்க வல்லமை உள்ளான் ஏகன் கருணையாளன்
இறையோன் அழிவை எங்கும் எதிலும் திணித்திட முனையான்
மறைவழி தவிர்ந்து தீநெறி ஒழுகும் மக்களை நன்னெறியில்
மாண்புறச் செய்திட அதிர்வலையாய் அழிவைத் தந்திடுவான்

- எங்கள் தேசம்

# ௭ மனிதனைச் சுகதேகியாக்கி...

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
பயன்மிகு கருத்தென நயந்திடுவர் அனைவரும்
உற்றிடும் கருத்தை ஒட்டி வாழ இன்று மனிதனால் ஆகுமா?
குறிப்பாய் இலங்கையர் வாழ்வில் இ∴து இன்று நிஜமாகுதா?

நோயில்லா வாழ்வில் எத்தனை பேர் உளராமோ?
நாளின்றைய குழந்தை தொட்டு முதியோர் வரையும்
நோயால் அவதிப்படுவோர் அனந்தம் காண்கின்றோம்
நம் நாட்டினர் கதி என்ன? இதில் விதிவிலக்கல்லவே

ஏன் இன்று இந்த ஓல நிலையில் மனித வாழ்வு?
எனது வீட்டில் எண்மர் உளர் எனக் கொளின்
தன்னைச் சேர்த்து நான்கிலொருபேர் மருந்து உண்பவரே!
உண்ணும் செலவன்று மருத்துவச் செலவே அதிகம் என்பர் அன்னவர்கள்.

மனிதனின் இன்றைய உணவே நோய்க்கு முக்கிய காரணமாம்
மாபெரும் பசுமைப் புரட்சி எனும் விவசாயத் துறையில்
மனிதனை மடக்கி நிற்கும் இரசாயன விஷம்தான் அதிகமே
மேல் பூச்சு திரவியமும் ஒவ்வாமை கொண்டுவரும் கலப்படமே!

பால்மா பக்கெட்டும் கேள்விக் குறியாச்சு
பசுமை மரக்கறியும் இயற்கைப் பசளையால் ஆனதல்ல
தானியமும் உபஉணவும் இவ்வாறே விளைச்சல் பெறுகிறது
தயக்கமின்றிச் சாப்பிட இன்று உணவு ஏது தான் உண்டோ?

நோயின்றி மனித வாழ்வு கண்டிட முடிந்திட்டால்
நீண்டகால ஆயுளும் தானே அமைந்திடுமாம்
சுவரிருந்தால் தான் சித்திரம் வரையலாம் எனக்கண்டு
மனிதனைச் சுகதேகியாக்க வழிதேடிச் செயற்படுவோம் வாரீர்!

- *சுடர் ஒளி*

# 10 தன்னைத் தூய்தாக்கி

மாற்றான் குறை குற்றம் பேச நான் தகைமை கொண்டவனா?
உற்றார் உறவினரையும் பகைத்துக் கொண்டவன் ஆயினன்
மனம் அறிய நான் செய்த குற்றம் ஒன்றா? இரண்டா?
முன்னம் செய்த பிழை கண்ட நான் திருந்தியுள்ளேனா?

கோலை, களவு, வழிப்பறி மட்டும் குற்றமென நினைக்காதீர்
கடத்தல், நயவஞ்சகம், பொய்சாட்சி, விபசாரம், துன்புறுத்தல்
கொடுமை, ஏமாற்றுதல், பொய்கூறல் என்று அனந்தம் உளவே
படுபாதகத் தன்மையில் தூரானவன் நீயா? மனச்சாட்சி கூறாதோ?

மனிதன் பிழை செய்பவன் மற்றவன் அறியாதும் இழைக்கின்றான்.
புனிதனாக முயற்சித்தல் தேவையாகும் முயன்றிடுவீர்
தன்னில் தன் மனம் அறியத் தூய்மை கண்டிட்டால்
மனிதன் என்ற நிலைக்கு உயர்ந்த தலைமையும் ஏற்கலாம்.

இருக்கும் பிழை எல்லாம் செய்து கொண்டு தாம் இங்கே
ஒரு வகைப் பிழை கண்டு பெரிது படுத்தித்தான் தூய்மை எனக்காட்டுவதா?
தம்மைத் தூய்தாக்கி மனமறிய நல்வாழ்வு பெற்ற பின்
நானிலத்தில் மற்றவன் பிழை போக்க முன் வருதல் தேவையாகும்.

- *ஜீவநதி*

## 11 முன்னேற்ற வழி

வாழ்வில் அனைவரும் முன்னேறுதல் வேண்டும்
வல்லமையுள்ள துறைகளைத் தேர்ந்தெடுத்தே
வாகாய்ச் செயல்படின் முன்னேற்றம் காணலாம்
வியாபாரம் மாத்திரம் சீவியவழிஎனக் கொண்டிடல் ஆகா

உலகம் இயங்க ஒவ்வொரு துறையும் அவசியம்
உன்னத விஞ்ஞான யுகத்திலும் செயற்பட தொழிலாளரும் உளரே
கருவிகள் மூலம் செயல்கள் நடந்திட ஆயிடினும்
கற்றோரும் மற்றோரும் கலந்தே செயல்கள் நிறைவுறும்

பாரிய செயற்பாடு கல்வித் துறையால் ஆயிடும்
பாரில் பிறந்த மனிதன் கற்றிடல் அவசியம் என்றே
புனித இஸ்லாம் புவியோர்க்கு உணர்த்தி நிற்பதால்
பல் துறை நிபுணத்துவம் கல்வியால் பெற்றிட முனைவீர்

ஒருவரை மிதித்துத்தான் முன்னேற அவாவுதல் ஆகா
கருவிலும் அடுத்தவன் நசுங்குதலில் பயன் பெறும் நினைவுகள் கூடா
பருவம் கண்டு பயன் காணும் பல்துறைமுயற்சியும் தேவை
ஒருவருக்கொருவர் உடன் பாடு கொண்டு முயற்சித்தல் அவசியம்

- ஔசை

# 12 இனிது

தம் மக்கள் மழலை மொழி பெற்றார்க்கு இனிது
தயவுடன் ஒப்பிட்டுச் சொன்னவர் வள்ளுவர் பெருமான்
யாழ் இனிது குழல் இனிது எனினும் தம் உயிர்
மழலையின் மொழி தாம் தாய் தந்தையர்க்கு மிக இனிது

இ∴தே போல் கண்ணுக்கினிமை காண்பதில் உளது
இன்பம் என்பதும் இனிமைகளால் அடைதல் தாம்
பூக்கள் இனியன பூப்போன்ற முகங்களும் இனியன
பூரண சந்திரன், கடல், சோலை, வான் இனியனவாம்

மனதிற் கினிமை மகிழ்ச்சி தருவன வெல்லாம்
மார்பு தட்டி வீறாப்பு பேசி இனிமை காணல் ஆகா
இதமாய்ச் சொல்வது இனிது இன் சொல் உரைத்தல் அது
இதனையும் வள்ளுவர் விண்டுரைத்தான் காண்கின்றோம்.

வாழ்வின் ஒவ்வோரமைதியிலும் இனிமை உண்டன்றோ?
வாழும் சமூக அமைப்பில் ஒற்றுமை பேணல் இனிது
ஒருவருக்கொருவர் உபகாரம் புரிதலும் இனிதே
ஒருவரை ஒருவர் அறிந்து புரிந்து வாழ்தலும் இனிது

மனம் பொருந்தி ஆண்–பெண் இருவர் கரம் பிடித்தே
குணமறிந்து இல்வாழ்வில் ஒன்றிணைதல் இனிது
மனம் கொண்டு ஆசிரியரைப் பணிந்து கல்வி பெறல் இனிது
மானம் மரியாதை பேணித் தற்காத்துக் கொள்ளல் இனிது

எளியாரைக் காணின் வசதியுற்றோர் வாரிவழங்கல் இனிது
களிப்புறச் செய்தே வருவிருந்து உபசரித்தல் இனிது
சலிப்பின்றிப் பொதுப் பணிகள் பார்த்திடுதல் இனிது
சர்க்கரைப் பாகு கற்கண்டு நாவிற்குத்தானும் இனிது

*- ஜீவநதி*

# 13 ஏமாற்றுக்காரர்

மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவரும் இங்கில்லை
பணம் படைத்தால் உற்றார் உறவு சுற்றம் நண்பர்
கூடிடுவர் பல்லாங்கு பற்றுள்ளோர் எனக் காட்டியே

மரத்தை விட்டாங்கே வௌவால்கள் நகர்ந்திடும் நாளுண்டு
மனிதரிலும் உற்றம், சுறறம், நண்பர் விட்டேகும் தினமுமுண்டு
உடனிருந்து கொல்லும் வியாதி போன்றோரும் நம்மில் உளர்
உற்றம், சுற்றம், நட்பு காட்டி அனுபவிப்பர் முழுதாய்த்தாம்

புல்லுருவி மரத்தை இறுகப்பற்றி உன் உறவைப் பிரிக்கலாகா என்கிறது
புல்லியே நின்று அன்பு காட்டும் பாசாங்கில் மரத்தையே கொன்றிடும் அது
புன்மைத்தனம் செய்யும் ஏமாற்று வித்தை இ:.தெனக் காண்பீரே
புன் மக்கள் நம்மிலும் இருந்ததனைச் செய்திடுதல் அறியீரோ?

உடுக்கை இழந்தவன் கைபோல வந்துதவுதல் நட்பாகும்
உறவும் உற்றுணர்ந்து உதவுதற்கே இருந்திடல் அவசியம்
வலை வீசி மீன் பிடிக்கும் தந்திரக் கயிறு திரிப்போர்
மலை போன்று உதவுவதாய்க் காட்டிடனும் நம்பிடாதீர்

- நமது தூது

# 14 மனித மிருக முரண்பாடு

காட்டில் வாழும் பல்லின மிருகங்கள்
வலிமை வாய்ந்தன. சாதுாரியம், புத்தி கூர்மை உள்ளன.
மனித இனம் அறிவுஇனம் எமக்குக் கேடு
அவ்வுயர் மனிதர் கீழ்ப்பட
எமது பலம் கொண்டு செயல்படுதல்
எம் குறிக்கோள் யாது செய்யலாம்?
கூடி ஆய்ந்தன பயமுறுத்தல், எச்சரிக்கை
முதலில் விடுவோம். அங்கிங்குச் சில அட்டகாசங்கள்
செய்து முடிப்போம்! மனிதன் மடங்குவான்
பார்த்துச் செயலைக் காரியம் மீண்டும் துணிவோம்.
ஒன்றாய்க் கூடித் தீட்டிய திட்டம் அமுலுக்கு வந்தன.
ஏச்சு, பேச்சு, அதட்டல், அடிதடி நடந்தன
காட்டிக் கொடுக்கும் எட்டப்பர் செயலால்
வழிகளில் எல்லாம் எச்சரிக்கை அறிவிப்பு!
மனிதனை இகழ்ந்து வாசகம் பலவும்
காட்சிக்காகின. அத்துடன் மனிதன் அறிவை
மடக்குவதென்றால் கல்விக் கூடம் நடந்திடலாகா
அறிவு கூடி மனிதன் (விழித்து) எழுந்தால்
மாக்கள் எங்கள் வாழ்வும் மறையும்
என்றுணர்ந்த வலிமை தந்திரம் கொண்ட மிருக இனம்
பள்ளிக் கூட வளவுள் நுழைந்தும்
ஆர்ப்பரித்துக் கர்ச்சித்தன

ஊரின் நடுவே அட்டகாசம் எழுப்பத்
தொடங்கின மிருக இனத்தின் வெறித்தனச்
செயலை மனிதன் உணர்ந்தான் எனவே
கூட்டம் கூடி முடிவு கண்டனர் மக்களும்
ஊரின் நடுவில் பள்ளிக் கூட வளவுள்
ஆர்ப்பரிக்கும் மிருகங்கள் அழிந்தொழிதல் அவசியம்
மனித விமோசனம் மனித உயர்வு நிலை பெற
வேண்டும் வகுத்தனர் விதிமுறை
அடி, உதை பதிலாய் துப்பாக்கிச் சூடு
வழி முறை கண்டான் மனிதன்
எழுந்து மிருகங்கள் வாலைச் சுருட்டின.
மிருக இனமெல்லாம் மீண்டும் காட்டில்
இடம்பிடிக்க முந்தின
வல்லமை உள்ள பெரிய மிருகம்
தலை குனிந்தது
தனது கூட்டமே தன்னை ஏய்க்க
வழிவகுத்துத் துணிவும் தளர்ந்தது.

- ஔசை

# 15 செல்வம்

மனித வளம் ஒரு செல்வம் எனக்கொண்டே
சனத் தொகையைக் கூட்டுவதில் நாட்டம்
சில அரசுகள் பரிசுகளை வழங்கிடவும் தாய்மார்க்கு
பல குழந்தை பெற்றெடுக்க வலியுறுத்தி நின்றனவே!

பாடுபட்டால் பலனுண்டு பாரினிலே
பார்த்திட்டால் உழைப்பதனைச் செல்வமென
உணர்த்தி விட தக்கதொரு சான்றேயாம்.
உழைப்பும் ஓர் உன்னதச் செல்வமெனக் கண்டிடுவீர்!

செல்வதுற் செல்வம் செவிச் செல்வம்
வள்ளுவர் நவின்ற வாக்கதனில் காணும்
கேள்வி ஞானம் பெறும் வழியும் செல்வமெனின்
கல்வியும் செல்வமெனத் தெளிதல் சாலும்

சேவைகள் பல வகையில் கண்டு செய்தால்
சுவையதனில் மனமொன்றே திருப்தி காணும்
மற்றையோர் வாழ்வதனில் சிறப்பு வேண்டி
ஆற்றும் செயல் யாவும் இங்கு செல்வமாகும்.

காணி, பூமி, சொத்து, பணம் செல்வம் தான்
சுகவாழ்வு மற்றுமொரு பெருஞ்செல்வம்
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமென
நவின்றிட்ட வார்த்தை அதன் உயர்வைக் கூறும்

- ஜீவநதி

# 16 வழி செய்வாய்!

நான் சீமான் என்கிறார்கள்.
நான் உண்மையில் தனவந்தனா?
என்னை நான் கேட்டுக் கொள்கின்றேன
என் மனசு ஒப்புதில்லை ஏன்?
நான் தனம் படைத்தவன் எனில்
எனது உடமைகள், தனம், சம்பத்து
எல்லாம் நாம் போகும் தலத்திற்கு
என் கூட வர வேண்டும் வருமா?
உண்மையாய் இது நடக்கும் எனில்
நான் சீமான் தனவந்தன்தான்
ஆனால் என் மதிப்பீட்டில் நான் ஓர் ஏழை
ஏன்? என் உயிர் பிரிந்து பயனிக்கும் அவ்வேளை
நான் கொண்டு செல்லவிருப்பன மிகவும் அற்பம்
ஆனால் கடன் "பளு" மிகப்பாரமாக உள்ளது.
ஆம்: மரணித்தபின் என்னுடன் வருபவை சொற்பமே!
ஆயின் நான் செய்த பாவம், ஏமாற்று, துரோகம்
என்னைக் கடனாளியாக்கியுள்ளது எனின்
நான் சீமான் ஆவதற்கு வழி உண்டா?
நான் வைத்திருப்பதாக மற்றவர் காணும் எதுவும்
உண்மையில் எனக்குச் சொந்தமில்லை
இரவல் பொருளே
நான் போகும் போது அவை என்னுடன் கூடவரா
நான் போகும் போது கூட வரக்கூடியன ஆயத்தம்
செய்ய முயற்சிக்கின்றேன்
ஆசைகள் தடை போடுதே!
என்னை நான் அறிவேன்
மற்றவர் என்னில்
ஒரு பக்கத்தையே பார்ப்பர்
நான் முழுதாகக் காண்கிறேன்

*- எங்கள் தேசம்*

# 17 மனிதன் கடன்காரன்.

கடனில்லா கஞ்சு கால் வயிறு போதும்
கடன் படா வாழ்வை வலியுறுத்தும் சான்றி.்.தே! ஆயின்
மனித வாழ்வே கடனின்றி ஆகாது
எங்கும் எவரிடத்தும் ஏதேனும் கடன் பளு தான்
தீர்க்க முடியாக் கடனில் சிக்கிடுவான்
மனிதனால் தீர்க்க வொண்ணாதது கடனொன்றே

பெறுமதி கணிக்கும் ஊடகம் பணம்
பணம் கொடுக்கல் வாங்கலில் மட்டும் தானா கடன்?
பெறுமதி கணிக்க முடியாத கடன் அனந்தம் உளவே.
அவை கடனன்று எனக் கடனை மறைத்தல்
மனித உயர்வுக்கே பங்கம் மானித நேயமுமல்ல
பெற்று வளர்த்த தாயின் கடனைத் தீர்த்து முடித்தவர் எவருளர்?
கற்பித்த ஆசான் மிகையான பிரயத்தனம்
மேற் கொண்டதன் விளைவு மாணவன் உயர்வு
வேதனமோ சொற்பம் ஆசிரியர் வாழ்வு உயர்ந்தா ?
மாணவன் மேலதிகக் கொடுப்பனவும் செய்யவில்லை .
ஆசிரியர் சேவை தியாகம் இங்கே மாணவன் கடனாளிதான்
இச்சையாகச் சென்னாலும் ஏற்பவர் எத்தனை பேர்?

பரோபகார வைத்தியர் அனுதாபம் கொண்டார்
சிகை ரோகம் சீராகத் தீர்ந்தாய் விட்டது .
சில காசு வைத்தியர்க்குக் கொடுத்தும் முடித்தார்.
சொன்னாலும் கடன் அங்கு தீர்ந்தாச்சா?
வைத்தியரின் மகோன்னத சேவையை மெச்ச வேண்டும்
பைத்தியம் தீர்ந்ததற்குப் பல கோடி சன்மானமும் சமமாமோ?

உலகில் மனிதனை இறைவன் உயர்வாக ப் படைத்தான்
தேவைகள் அனைத்தையும் அவனே தீர்த்தனன்
மழையை , வெய்யிலை மாறி மாறித் தந்தனன்
பயிர் பச்சை வளரவும் வழி அமைத்தனன்
தன்னை வணங்கும் படியும் ஏவினன் இறைவன்
கடனாளி மனிதன் பூரணமாய் வணங்குவோர் எத்தனை பேர்?

- *நவமணி*

# 18 கோட்பாடு

கோபம் மீறி ஏசுவன் பேசுவன் பிழை கண்டு
கொள்கையில் ஊன்றியே நின்றிடுவன்
குதர்க்கம் புரிவதில் ஈடுபாடு கொண்டிலன்
குற்றத்தை வலியுறுத்தித் தர்க்கிப்பதில் முனைவன்

இதனால் எப்போதும் வீட்டினுள் முரண்பாடு
இனியவை காணின் ஏற்றத்தைக் கூறுவன்
வன்மையாய் பேசிடினும் நன்மையே விரும்புவன்
நன்மையைச் செய்திடின் அவரையே வாழ்த்துவன்
ஏகமாய் கூடி எல்லோரும் எதிர்ப்பதால்
சோகமாய் அதிர்ந்து மடிந்திட முனைந்திலன்
சொந்தமாய் இருப்பினும் அயலான் ஆயினும்
பந்தம் அகலும் எனத் தலை சாய்க்க முனைந்திலன்

வஞ்சினன் கொண்டிலன் பகைமை வைத்திலன்
துஞ்சியே போய்விட நெஞ்சிலே வஞ்சகம்
அஞ்சிடும் முறையில் கொண்டு அழிவே ஆக்கிட
அறவே நினைத்திலன் அநியாயம் விளைத்திலன்

எதிர்ப்பை விளைத்து நாசம் தந்துமே
வதைப்பினும் அவர் மேல் பழி கண்டிலன்
வாழ்கை நலம் பெற அவர்க்கே ஆயினும்
வசதிகள் வேண்டின் செய்தும் உதவுவன்

நெஞ்சிலே சுமந்து கள்ளமாய்க் கதைத்திலன்
வஞ்சகம் விளைத்திட சூழ்ச்சிகள் புனைந்திலன்
நேரடி குறை கூறி ஆறுதல் கொண்டே நான்
நாவாலும் நெஞ்சாலும் நல்லதை நாடுவன்

இவ்வாறு நான் கோட்பாடு கொண்டுமே
அவ்விதம் செயல்பாட்டில் முனைந்தே நின்றிட
அழிவும் பகையும் எதிர்ப்பும் பெருகலால்
அவலத்தில் மனைவி மக்கள் உறவுகள்
மூழ்கினும் என் செய்ய?

- *ஜீவநதி*

# 19 இனி என்று காண்பேன்!

அஸ்ஹர் மறைந்திட்டார்
செய்தியால் அதிர்ந்து போனேன்!
ஆஸ்தானம் கலியாகி விட்டதா?
பத்திரிகை உலக ஜாம்பவான்
சமுதாய உயிர்த் துடிப்பாய் நவமணியை
நிலைநிறுத்திய பெருமகன்
இத்தனை அவசரம் ஏன்?
என்ன நடந்தது?
மனத்தில் பல்வேறு வினாக்கல்
நம்பவே முடியவில்லை!

நவமணி மட்டுமா வீரகேசரி தினபதி பத்திரிகை
அவர் துணிவல் எவ்வாறெல்லாம் மிளிர்ந்தன?
புத்திரிகைக்கென இருபத்தைந்து வருடங்கள்
பாராளுமன்ற கலரியை அலங்கரித்தவர்
பணத்திற்கு விலை போகாத
பதவிக்கென வால் பிடிக்காத
ஓர்மை மனம் கொண்ட உத்தமர்!

உயர்வுகள் தேடியே வந்தும்
உதறித்தள்ளி
உன்னத இலட்சியத்தில்
திளைத்தவர்
எழுச்சிக்குரலில் எழுந்து
அழுத்தமாய்த் தனித்துவம் பேணியவர்
அறிமுகமின்றியும் அவரிடம் சென்றவர்
ஆதரவு பெற்று எழுத்தில் உயர்ந்தே நின்றனர்
எவர்க்கும் இன்முகம் காட்டி
எழுத்தினில் உயர்வை ஊட்டி
பலமிக்க சமுதாயத் தூணாய்த் திகழ்ந்தவர்
பிரிந்தே போனார்!
இனி என்று காண்பேன்?
தியாகங்கள் புரிந்த மகான் அஸ்ஹர்
இஸ்லாமிய உத்தமன்: இனிய சுவர்க்கம்
இவர்க்கென நீ இறைவா! இனிதே வழங்க
என் பிரார்த்தனை!

- *நவமணி*

# ௨0 வடபுல முஸ்லிம்களுக்காக...

ஈழவள நாட்டினிலே
யாழ்பாணம், மன்னார் பகுதிகளில்
வாழ்வாங்கு வாழ்ந்த முஸ்லிம்கள்
பாழ்பட்டுப் போகவந்தது வெளியே(ற்) ற ஆணை
அல்லலும் இடையூறும் கண்டுதான்
அவதிப்பட்டு அகன்றனர் அங்கிருந்து
தப்பினோம் பிழைத்தோம் என்றாயிடினும்
தங்குமிடம் தரிப்பிடம் ஏதுமில்லை
அந்தரமாய் அவதிப்பட்டு உடுத்த ஆடையுடன்
சொந்த பந்தம் அயலார் எல்லாம் நிலை குலைந்து
சொத்தென்று இருந்தவைகள் கைநெகிழ
வந்தின்று இருபத்து நான்காண்டுகள் தாண்டிடுதே!
முந்திக்கொண்டோர் ஒருசிலர் மீண்டு
பந்திக்கு முந்து என்றாங்கு போய் அமர்ந்திடினும்
சந்ததமும் அவதியுறும் பல நூறு குடும்பங்கள
எந்தவித ஏற்பாடும் கைகொடுத்தலும் இன்றி
ஏக்கத்துடன் தினம் அழுது துன்பத்தில் தோய்கின்றனர்
பக்குவமாய் சிந்தித்துப் பார்ப்பின் தலைவர்கள்
ஊக்கத்துடன் வழிகாண முன் எழுந்து நின்றிடுவர்
தடைக்கல்லாய் ஏதுக்கள் அமைந்திருப்பன எவை? எனக்
கண்டு கொண்டு உரிய வழி தன்னில் முயற்சி காண்க
இங்கு நாம் கோழைகளல்லர் தாமே
அகிலமெங்கும் பரந்துள்ள இலங்கை முஸ்லிம்கள்
போராட்டம் முன்னெடுங்கள் உலகே கண்கொண்டு
பரிவுடன் பார்த்திடற்கு வழி அமைப்பீர்
உலக மாந்தர் விழித்திட வைப்பதனால்
அரபு உலகும் கண்டுகொள்ள வழி செய்வதினால்
பல்வேறு பிரச்சினைகளும் தீர்ந்திடற்கு வழியாகும்
முஸ்லிம் சோதரீர் முன் எழுந்து வாருங்கள்
முனைப்புடன் உலகு பூராவும் கோஷம் எழுப்புங்கள்
முஸ்லிம் சோதரர் துன்பம் போக்கிட விழையுங்கள்
இருப்பிடம் தொழில் துறவு பெற்றாங்கு
நோய் நொம்பலம் தீர்ந்த வாழ்வில் சுமை
நீங்கிக் கூழ் குடித்தேனும் நிம்மதி பெற வழியமைப்பீர்!

*- முஸ்லிம் முரசு*

# 21 சுமைகள்

மூட்டை மூட்டையாய் முதுகில் தூக்கிச் சுமப்பது சுமைதான்
முழுதாய் குழந்தையைத்தாயானவள் பெற்றெடுக்கும்
வரை வயிற்றில் சுமக்கிறாள்
முதுகில் சுமத்தல் என்பது
பயன்விரும்பிச் செய்வதொன்று
முற்றாய்க் குழந்தையைச் சுமப்பதும்
தாய் மனமகிழ்வில் செய்வதே!
கொடிக்கு காய் பாரமா?
எனக் கேட்கப்படுவது இதனாலேயாம்
கடினமான சுமைகளைச் சிலர்
சுமக்கின்றனரே காண்மின்
தந்தை பாராமுகம் தாய் வெளிநாட்டில் பணிப்பெண்
தனது பேரன் பேத்திகளைப் பாட்டி சுமக்கிறாள்
வாலிப வயதில் வீட்டில் மகன் வெறுமனே இருந்து சாப்பிட
வருந்தி உழைத்து உணவு கொடுப்பது
முதிய தந்தைக்கு சுமைதானே!
பிள்ளைகள் பலர்இருக்க பெற்றோரைக் கவனித்தல்
பலரும் செய்யாது ஒருவர் தலையில்
விட்டு விடுவதும் சுமையன்றோ?
கற்கச் செல்லும் பாலகர் பையில்
பெரும் பாரமாகப் புத்தகங்கள்
கடினமாகச் சுமந்து செல்லும்
மாணவர் மனம் புண்படாதா?
கணவன் உழைப்பைச் சீராய்ப் பேணிச் செலவு செய்தல்
கௌரவம் கட்டிக் காத்திட வழியதாகும் ஆயின்
ஏட்டிக்குப் போட்டியாய் மற்றோர் செய்யும் விதம்
மட்டிலாச் செலவு உண்டாக்கும்
மனையாள் சுமை தருபவளே!

நிறுவனத்தில் அங்கத்துவம் பேணும் அனைவரும்
ஒரே மனத்தினராய்ப் பொதுச் செலவுகளில் பங்கேற்பின்
ஒருவருக்கேனும் சுமைகள் ஏற்படும் நிர்ப்பந்தம்வராது
தலைமை தனித்துச் செலவுகள் செய்ய வேண்டின்
தாக்குப் பிடிக்க முடியாத சுமைகள்
தலைவர்க்கு வந்திடாதா?
கல்யாணம் செய்து வைக்க
வீடு, கிணறு, வளவு தேவையாம்
கல் மனம் கொண்ட மணவாளர்
மனம் இத்தகைத்து
சீதனமும் பணமாகத் தேவை
இரண்டு மூன்று குமர்களைச்
சிறப்புறப் போற்றி வளர்த்தவர் நிலைதான் என்ன?
வாகனம் வேறு தேவை எனக் கேட்கும் மணாளராயின்
வகையற்ற நிலையில் சுமைகளால்
வருந்துவரே பெற்றோர்.

# ௨௨ உயர்ந்த பூமி மயானம்

மயானம் என்பது
பயங்கர இடமா?
மரித்துப் போன சடலங்கள்
உறங்குகின்றன

அம்மட்டா?
சமத்துவம் பேணப்படும்
முக்கிய இடம்
கெட்டவன், நல்லவன்,
உயர்நதவன், தாழ்ந்தவன்
குலபேதம், சாதிபேதம்
காண முடியா நிலையில்
சமமாகவே அனைவரும்
நகர மயானத்தில்
இடம் பிடித்துள்ளனர்.
மேலும்
மகிமைப் பூமி நகரமயானம்
நாட்டுச் சேவை செய்தவர்கள்
தியாகிகள், கற்றோர், பண்டிதர்
சமய குருமார், நாட்டுத் தலைவர்
போராட்ட வீரர், தர்ம நெறி வாழ்ந்தோர்
அனைவரும் ஆங்குள்ளனர்

அவ்வாறெனில்
மயானம் பயங்கர இடமா?
இல்லை, அணைவரும் மதிக்கத் தக்க
மகிமையுள்ளோரும் இருப்பதால்
சரித்திரங்கள் பல கூறும்
வாழ்க்கை நெறி
பல காட்டும்
உயரந்த பூமி உன்னத பூமி
அமைதி நிலவும்
நகர மயானம்

*- நவமணி*

# ௨௩ வீண் பித்தலாட்டம்

உன்னால் செய்ய முடிந்ததை
நானும் செய்கிறேன் பார்
ஏட்டிக்குப் போட்டி
வீடு கட்டுவதில்
வாகனம் வாங்குவதில்
ஆபரணாதிகள் அணிவதில் ஏன்?
உடை அணிவதிலும் தான்
படாடோபமாய் வைபவங்கள்
பெஷன் பெஷனாய் வீட்டுப் பொருட்கள்
பணத்திமிர் செய்யும் வேலை
மாற்றானுக்குப் பெருமை காட்டி
இத்தனையும் நடந்தேறுகின்றன.
இவ்வளவு சாதித்தும்
ஈற்றில் இத்தகையோர் கண்டதென்ன?
இறக்கும் போது ஒன்றிடுமா அவை?
ஆறடி நிலமே சொந்தம்
ஆறுதல் தர செய்த நற்செயல்கள்
அமைந்திடும் நற்சான்றுகளாய்
ஆயின்
ஏடா கூடமாய் இக்கருமங்கள்
ஏன்? வீண் பித்தலாட்டம்
மனிதனின் அவசியத்தின் அளவே
மாட்சிமைகாணல் தேவை.

- ஜீவநதி

## 24 கிண்ணியாப் பாலமும் பாரிய மாற்றமும்

கிண்ணியா கிராமம் என்றே வழங்கிற்று
கண்ணியமானோர்
கைகொடுத்து நிற்கவே
படகுத்துறை பாலம் அமைத்து
மாற்றம் காண
பட்டென்றுஆயுளது ஆங்கொரு திருப்பம்
பல தசாப்தங்கள் முன்
சீனக்குடாவில் புகைவண்டி இறங்கி
பயணப் பொதிகளைச் சுமந்தே
நடந்தேன் துறையடி
படகில் அக்கரை சென்ற பின்பும்
நடைதான்
பெரிய கிண்ணியாவில்
ஆசிரியராக எனது சேவை
அண்மையில் கிண்ணியாவை
அடைந்த போது நானும்
எண்ணச் சுழற்சியில் சிக்கியே
நின்றேன் ஆங்கு
முன்னேற்றம் முடங்கியது
தோணி, படகு சிரமம் கொடுத்தமை
மலைப் பட்டினம் செல்லத்
தொடர்புகள் கொள்ள
பட்டனர் கஷ்டம்
இன்றோ அந்நிலை முற்றிலும்
மாற்றம் பெற்றமை
நன்றே துரிதமாய் கிண்ணியா
நகர் எனக் காண்கிறோம்.

பல்வேறு வசதியும் உடன் பெற்றிட
அங்குற்றோர்
பாக்கியம் பெற்றுளர்
பண்பாடுற்றோர் பாங்கினால்
ஆகும்.
பாலம் அமைக்கப் பல முறை
கற்கள் நட்டினர் ஆங்கே
பாவம் என்றே பரிதாபம்
கொண்டோம் நாமும் தாம்
பல்முறையும் நாம் இதனை
நேரில் கண்டே இருந்தோம்
பல்வேறு அரசியலாரும் தமக்குச்
சாதகமாக்கினர் இதனை
இன்றுள ஆட்சியினர்
விடாப் பிடியாய் உதவி பெற்றமை
நன்றே செய்தனர் எனக்
கிண்ணியா மக்கள் நெஞ்சிலே
கொள்வர்
வாழ்கை வசதிகள் பலவும் பெற
வாய்ப்புகள் அனந்தம்
வானளவுயர்ந்து வளம் பல பெற்று
வாழ்க கிண்ணியா பதியே.

- பேனா

# 25 வல்லரசும் வலுக்குன்றும்

வல்லரசெல்லாம் வலுக்குன்றி ஒரு நாள்
வகையறா நிலைக்கும் தள்ளப் படலாம்
தலைவர்களும் நிதம் நிதம் மாற்றம் பெற்றே
தலைகீழ் நிலைக்கும் தள்ளப்படுவர்

காவல் காக்கும் நாய் போலின்று
ஆவலாய்க் கண்காணிக்கும் அமெரிக்கா
நாட்டின் தலையென இருந்த "புஷ்" ஷோ
நேற்று முதலாய் புஸ் ஸாய்ப் போனார்

ரஷ்யா கண்ட கர்பசோவ் நிலையும்
கவனிப்பாரில்லா காட்சியானார்..
இரும்புப் பெண்ணாய் பிரிட்டன் கண்ட
தச்சர் தனது தகைமை குறைந்தார்!
தலைவர் ஒரு நாள் தகைமை இழத்தல்
தரணியெங்கும் வெகு பிரசித்தம்

பங்களாதேஷ் கண்ட இர்ஷாதும்
பங்கமாய்ப் போனார் பவிசும் இழந்தார்
தலைவர் எல்லாம் தகைமை இழந்தால்
தனிப்பெரும் நாடுகள் தகைமை இழக்கும்

ரஷ்ய நாடு சின்னா பின்னமாய்
யுகோஸ்லாவியா துண்டாடப்பட
அமெரிக்க நாட்டில் ஏன் நிகழாது?
அயல் நாடு இந்தியா குழம்பியிருக்க
அற்புதங்கள் பலவும் எதிரில் நிகழலாம்.

- *நவமணி*

# ௨௬ ஆசை

மனம் ஒன்றியதில் ஆசை வேட்கை கொண்டிடின்
அதனை அடையும் நோக்கில் செயல் பட்டு
எத்துனை இடர்கள் வந்தெய்திடினும்
எவ்வெவற்றைப் பறிகொடுத்தும் அனுபவித்திட முனைவன்.

பாரில் பிறந்தவன் கொண்டிடும் பற்பல ஆசைகள்
பெண்ணாசை, மண்ணாசை, பொருளாசை இத்தியாதி
பெற்றார், உற்றார் தடுத்திடினும் நேர்வழி பிசகியே
பாங்கன் உபதேசமும் தட்டி அடையவே நாடுவன்

ஆசை வெட்கமறியாது என்பது ஆன்றோர்வாக்கு
ஆசை காட்டி மோசம் செய்வோர் நிறைந்த உலகில்
ஆவல் உந்துதலில் சிந்தனை பிசகி முனைந்து நின்றிட
மோசடி நடக்கலாம் நாணம் அழிந்திடல் தானும் ஆகலாம்.

ஆயின் ஆசை மீதூரப் பெற்றவர் எவரும்
எவ்விடத்தும் ஆசையை விட்டொழிவான் உண்டா?
எந்த இலக்கில் ஆசையை அடைந்திட நாட்டமோ
எவரை அழித்தும் எவ்விதத்தும் அதனை அடைந்திட முனைவான்

பிறர் மனையாள் ஆயினும் ஆசை மோகம் கொண்டிடின்
நெறி பிறழ்வுகள் செய்தும் அவளை அடைந்திடத் துடிப்பான்
கொலைகள் நடந்திடக் காரணனாகி அவலங்களில் மூழ்கிடவும் ஆகும்
கொண்ட ஆசை மனிதனை விட்டகலா என்பதை இங்கு காண்பீர்!

- ஜீவநதி

## ௨7 உலக நியதி

உயர்ந்தவன் தாழ்வதும்
தாழ்ந்தவன் உயர்வதும்
உலக நியதி
பங்களாதேஷில் பரிணமித்த
நிகரிலாத் தலைவன் இர்ஷாத்
நிலை குலைந்தொரு நாள்
ஆட்சியை இழந்தான்
ஆட்சியாளர் கைக்குள்
சிறைப்பட்டன்று அவதிப்படவும்
ஆளாகி நின்றான்

பேராட்சியாளன் ஷியாஉல் ஹக்கும்
விமானமேறிப் பேரதிர்ச்சி தந்தே
விபத்தில் சிக்கி மறைந்தேயொழிந்தான்
மாட்சிமை என்பது மாயா ஜாலம்
மண்ணுள் சகலதும் மறைவது உண்மை
வீரனும் ஒரு நாள் தோல்வி காண்பதும்
வீராவேசம் குறைந்து போவதும்

குலம் குறை பேசினும் இலங்கை நாட்டின்
இணையிலாத் தலைமை தாங்கி நின்ற
இன்முகமுடையான் பிரேமதாஸா
புரியாதவற்றைப் புரியவும் வைத்தான்.
முன் பொருநாள் கீழ்மையும்
பின் பொருநாள் உயர் நிலையும்
மீண்டொரு நாள் வீழ்ச்சியும் கண்டான்

- *நவமணி*

# 28 புது வருடம் - முஹர்ரம் முதல் நாள்

"முஹர்ரம் தனில் முதற் பிறைதான்
முஸ்லிம்களின் புதுவருட முதற் தினம்
ஹிஜ்ரி வருடக் கணிப்பீட்டில்
ஆயிரத்து நானூற்று
முப்பத்தியேழு ஆரம்பம்!

புதுவருடம் எமக்கும் உளதென்று நாம்
புத்தாடை பூண்டு
புதுவேகம் கௌல் நலனே
பண்பாடு தனித்துவம்
பேணுதல் அவசியம்
பல்லினச் சமூக வாழ்வினில்
கலாச்சாரம் பேணலாகும்!

மாற்றார்களின் முதற் தினம்
கொண்டாடல் ஏன்?
பற்றியே விடுமுறை தினம்
என்று ஜனவரியில்
முற்றிலும் நஸாராக்கள்
கொண்டாடுதல் போல்
முஸ்லிம்கள் அவ்வழி
கொண்டாடும் நாளி∴தே!

இஸ்லாம் வருடம்
முஸ்லிமுக்கு வேறுளதால்
இன்ன தினம் என்பதையும்
இஸ்லாமிய வருடம் நாள்
பண்ணியே குறித்தெழுதிக்
கொண்டாடலும் அவசியம்
புதுவருடம் தனில்
இலட்சியமாய்க் கொண்டிடுக!

"முஹர்ரம்" மகிமை
நிறைந்த மாதம் – அதுவும்
மனிதன் அறிய
உணர்த்துதல் தேவைதான்
முஸ்லிம் மாந்தர்
ஊர்கள் தோறும்
"முஹர்ரம்" விழாவினைச்
சிறப்புடன் செய்திடுக!

- ஞாயிறு வீரகேசரி

# ௨௯ முன் எச்சரிக்கை தேவை

நோய் கண்டால் மருந்தில் சுகம் காண்போம்
நோக்கம் இவ்வாறு கொள்வோர் பலருளரே
நோய் இன்னது எவ்வாறெனக்
காண்பது தான் ஏற்றம் ஆகும்
நாளடைவில் மருந்து செய்ய
அவையே வாய்ப்புத் தரும்.
அவ்வாறெனினும் சில வைத்திய முறை
பாதிப்பு நல்கிடுமாம்
ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குறை
இருந்திடும் என்பது போல்
மருந்தே வேறொரு நோயை எழுப்பி
எமைத்துயர் படுத்தும்
பெருமையில் மருந்தால் ஆகிடும்
என்றிடல் மடமையே!

அத்தோடு மருந்து கேட்காத
நோய்களும் உண்டெனவே
எத்தகையோரும் ஏற்றாக வேண்டிய
நியதியும் வரலாம்
வாய் வீச்சில் நோய்ப் பரிகாரம்
மருந்து எனக் கூறிடுதல்
மாய் மால வித்தைபோல்
எனக் கருதலால் தாமோ?
காயம் பட்டால் கட்டுப்
போடலாம் என்றிடுவர்
காயத்திலே உள்ளூறுப்பு
ஊறுபடின் யாது விளையும்?
மாற்றுறுப்பு பொருத்திவிடல்
உடன் ஆகும் காரியமா?
மாய்வது பற்றியும் மனிதன்
சிந்தித்து வாழ்தல் தேவை.

சூனியம் என்பதெல்லாம்
வெறும் பொய்க் கூற்று
சூட்சுமச் செயல் ஆதலால்
வாய்க் கொழுப்பில் மறுத்திடுவர்
கோட்பாட்டுக் காரரெல்லாம் குலை
நடுங்கும் நிலைமை வந்தால்.
கொள்கையெல்லாம் பறக்க விட்டுச்
சூனியம் வெட்டச் சென்றிடுவர்

நோய், விபத்து, சூனியம்
என்பதெல்லாம் உறுதியே
இன்றும் நாளையும் மனிதனுக்கு
முடிவையும் தந்திடும் அவை
முன் கூட்டி எச்சரிக்கையாய்
இருந்து கொள்தலே
மறைந்து விடும் மனித வாழ்வுக்கு
வசதிதரும் வழியாகும்.

*- நமது தூது*

# 30 கால்கள்

மனிதன் நிலத்தில் நிற்கின்றான்
ஆங்கே நடந்தும் செல்கிறான்
கால்கள் சக்தி ஊட்டின
கால்களிரண்டும் மனிதனை
உயர்த்திக் காட்டின
மிருகங்கள் விலங்கினங்கள் நிற்கவும்
கருவி கால்களே ஆயிற்று
நாற்கால்களால் நடந்தன. ஓடின
நற்பாக்கியம் கால்களால் பெற்றன
கோழியும் கொக்கும் புறாவும் மட்டுமா?
கழுகும் பருந்தும் மற்றுள பறவைகளும்
இறக்கை விரித்துப் பறந்தாலும் கால்கள்
இரண்டும் உந்தித் தள்ளவே பறந்தன.
மரங்கள் நிற்கின்றன.
வேர்கள் பலத்தைத் தந்தன
ஆணிவேர் – மூலவேர் – பக்கவேர்கள்
அவை மரத்தின் கால்களே ஆயின

கட்டிடம் எழும்பவும் கால்கள்
கட்டுமானத்தில் அமைந்திட ஆயிற்று
அத்திவாரம் அங்கே கால்கோள் இட்டது.
அவற்றை கால் போல கருதவும் ஆகியதே!

செயற்கைப் பொருட்களும் கால்களால் உயர்ந்தன.
இருக்கை நாற்காலி எழுந்திடும் மேசை
அரசனின் ஆசனம், சாய்ந்திடும் கோபுரம்
அமைத்த கால்களில் உயர்ந்து தோற்றின
ஊர்வன சில நெளிவன சில காலகளற்றன
உயர்த்தித்  தலையைக் கண் கொண்டு பார்க்கவும்
சிறு நேரம் மத்திரமே முடியும் ஆகும்.
சீறிடும் நாக பாம்புக்கும் அகேதிதான்

– *நவமணி*

# 31 குத்தூஸ் நானாவும் மனைவியும்

குத்தூஸ் நானா வீட்டினிலே
குடும்பச் சண்டை பெரிதாகி
குடமும் சட்டியும் பாதையிலே
வாறவன் போறவன் காண்கின்றான்
பரீதா நாச்சி வாயாலே
பெரிதாய் விட்டது பிரச்சினையும்
வம்பு தும்புப் பேச்செல்லாம்
வளர்த்து நாசம் தேடினாளே!

பெண்ணாயிருந்தால் வாயடக்கம்
பேனிக்கொள்ளனும் பாரினிலே
பகட்டுக் கருமம் தரித்திரமாய்
பாதித்திடுமே வாழ்வினையே

குத்தூஸ் நானா பண்பாளர்
பணிவும் குணமும் உறைவிடமாம்
பரிதா நாச்சி முன்கோபி
பாய்ந்து சண்டை பிடித்திடுவாள்

இலையும் குழையும் கொணர்ந்தாலே
மலையாய் வேலை பெருகிடுமே
இலையால் கஞ்சி காய்ச்சிட்டால்
தொலையும் நோய் நொடி என்றுண்டா?

கேட்டாள் கேள்வி நேரினிலே
பட்டது கணவன் நெஞ்சத்தில்
ஏச்சுப் பேச்சு ஏதுமின்றி
உடைந்தது சட்டி பானை குடம்

வேளா வேலை உணவுக்கு
வருந்தி உழைத்துக் கொடுத்து விட்டால்
பிள்ளை குட்டி நலத்துக்கு
பேழைக் கஞ்சும் ஆகாதா?

பெண்ணால் இதனை முடியவில்லை
சட்டி பானை தேவையில்லை
புரட்டி உருட்டித் தள்ளிவிட்டார்
மீண்டும் கடையில் வாங்குவரா?

- ~~நவமணி~~ படிகின்

# 32 நடுநிலையாளர்

இன்றுலாவும் வயதில் மூத்த பல் துறைக் கலைஞர்
நின்றுயர்ந்திருப்பதை நாம் கண்டுகளிக்கிறோம்
பன்முறையாலும் வழுத்த வேண்டிய சிவகுமாரன்
தன் முனைப்பில் பெருமை பேசாச் சாந்தி குணம் படைத்தவர்.

குமாரன் எனப் பெயர் குமரன் ஆகவே தோற்றம்
சமர்க்களம் ஆய்வுத் துறையில் கண்டும் அஞ்சார்
அமர்வுகள் இலக்கியத்திற்கு எங்குண்டோ அங்கு
அவர் நிழல் படிவதைக் காணாதிருத்தல் அபூர்வம்.

விமர்சனம் கதை கவிதை ஆய்வு எனப் பல்துறையும்
அமர்ந்து களம் கண்ட பெருமகன் அவர் ஆவார்
கவர்ந்து அனைவர் மனதையும் கொள்ளை கொள்வார்
காய்தல் உவத்தல் இல்லா நடுநிலை அவர்க்குக் கை வந்த கலை

ஆங்கிலம் பாண்டித்தியம் எனின் அருமைத் தமிழ்
ஆங்கிருந்து அவரை விட்டு அகலவேயில்லை.
இங்கிதம் தெரிந்தோர் அவர் நலன் புகழ்வர்
பங்கு நாமும் பெற ஜீவநதி களம் அமைத்தமை பெருமை.

- ஜீவநதி

# 33 அபூ ஜஹ்ல் இன்று

அந்தகார அரேபிய, மக்காவில்
அதிகார மமதையுடன் அபூஜஹ்ல்!
வேறொரு தலைமை ஆங்கு
ஏற்றம் பெறுவதை வெறுத்தான்!
இஸ்லாத்திற்கெதிரான யுத்தம்
இங்கே மூண்டதும் இதனாற்றான்
தனக்குப் போட்டியாய் முஹம்மது நபி
உருவாவதற்கே மறுதலிப்பு
"இஸ்லாம்" உண்மை என்றறிந்தும்
இன்னொரு தலைமை இம்மண்ணில்
அபூஜஹ்லுக்குப் பொருந்தவில்லை!

இன்றும் நம்மிடம் அபூஜஹ்ல்கள்
எத்தனை பேரோ இருக்கின்றனர்
பொறாமை புழுக்கம் பகல் வேஷம்
பள்ளிவாசலின் அதிகாரப் பதவிக்கும்
அபூஜஹ்ல் தனம் கொள்வார்
கல்லூரித் தலைமைத்துவம் என்றாலும்
அபூஜஹ்ல் வன்மம்
போடும் தடைகள்
அரசியலிலும் இக் கைங்கர்யம்
அகோர தாண்டவம் ஆடிடுதே
எங்கு நோக்கினும் அபூஜஹ்ல்கள்
நச்சு விதைகளை விதைக்கின்றனர்
அன்று நேருக்கு நேர் மோதல்
இன்று இருட்டில் கழுத்தறுப்பு
அவ்வாறானால்
ஜாஹிலிய்யா அரேபியாவின்
அபூஜஹ்ல்கள் பரவாயில்லை

- *நவமணி*

# 34 மெய்ஞ்ஞானம்

மெய்ஞ்ஞானம் தந்த பண்பாடுகள்
மரபுரிமையாய் மனித வாழ்வில் ஒன்றிவிட்டவை
விஞ்ஞானம் கூறும் ஆய்வு நுகர்வுகளால்
அஞ்ஞாத வாசத்திற்கும் அவை ஆட்படுகின்றன.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் முரண்பாடுற்றன
எஞ்ஞானம் ஏற்றது? என்பதில் எம்மவர்க்குள்ளும் முரண்பாடு
ஆயினும் விஞ்ஞானம் முற்றுப் பெறாத மாற்றத்தில்
ஆளுக்கொருவிதம் நாளுக்கொரு விதம் புதுமை நெகிழ்வுகள்

என்றோ நிலைபெற்ற மெய்ஞ்ஞானம் போக்குகள்
இன்றும் ஒன்றையே கூறி நிற்கின்றன அதில்
விஞ்ஞான ரீதியாய்ப் பிழை எனக் கொண்டவை
அஞ்ஞானம் அக்கருத்து என்றே ஆனவை இன்றுள

இறைநியதிப்படி கண்ட மெய்ஞ்ஞானம்
இகத்தில் திருப்பங்களைப் பெற்றுப் புதுமைகண்டும்
அகத்தில் திருப்தியுறாதுற்றோர் அனந்தம்
ஈற்றில் மெய்ஞ்ஞான உண்மையதில் தெளிவு கொண்டனர்

விஞ்ஞான வளர்ச்சியோ முற்றுப் பெறாதது
எஞ்ஞான்றும் "இதுதான்" என்றிடல் ஆகாதது
பொய்ஞானம் கொண்டாட முற்படல் கூடாது
மெய்ஞ்ஞானம் கண்டுவாழ்தலே ஏற்புடைத்து

- ஞானம்

# 35 முஸ்லிமாய் வாழ்ந்தால்

இறைவன் அளித்த உண்மை மார்க்கம் இஸ்லாம்!
இதைக் குறைவின்றிப் பேணி வாழ்வோரே முஸ்லிம்!
அல்குர்ஆன் வேத நூல் என்பததன் கட்டளை!
அல்ஹதீஸ் என்பதோ நபிகள் காட்டிய வழி முறை!

இவற்றைப் பேணுவோர் மனிதரில் சிறந்தவர்
இம்மை மறுமை இரண்டிலும் வென்றவர்!
எம்மவர் வாழ்வினில் ஒளிருதா இஸ்லாம்?
இல்லையே! அதனால் இழிநிலை அடைந்தார்.

வாய் வீச்சில் மட்டும் தான் வாழ்வதோ இஸ்லாம்?
செயலிலோ சூன்யம், நடைமுறையில் ஏதுமில்லை
நேர்மை, அன்பு, உண்மை, தூய்மை,
விசுவாசம், நம்பிக்கை, நாணயம் எங்கே?

இஸ்லாத்தை ஈமானை எந்நாளும் அடியொற்றி
இகத்தினில் இனியும் நாம் வாழ்ந்திடத் துணிந்தால்
ஜெயமெனும் வெற்றியை நிச்சயம் அடைவோம்!
ஜெகம் போற்றும் நிலைபேறு அடைவது உறுதி!

வையகந் தன்னில் முஸ்லிம சமூகம்
வைரமாய் வாழ்ந்தது வரலாற்று உண்மை
வீழ்ந்திட்ட காரணம் எதுவென்று கண்டு
வீறுகொண் டெழுந்தால் உலகாளும் இஸ்லாம்!

*- வார உரைகல்*

# 36 நல்ல எதிர்காலம் அமைந்திட

தோட்டத்தில் வாழும் இள நங்கையர் இளைஞர்
போட்டியிட்டே கல்வி கற்பதில் முனைந்திடுங்கள்
காட்டி நிற்பீர் நாமும் சளைத்தவர்களல்லோம்
எட்டி நின்ற மலையக மக்களே!
முன்னெழுந்து வருக என அழையுங்கள்

முனைப்புடன் இயக்கமாய்ச் சேர்ந்து செயற்படுவீர்!
கட்டுக் கோப்பாய் வாழ்க்கை அமையத் திட்டமிடுங்கள்
"கள்" குடிப்போர் எம்மில் இல்லை என்ற நிலை காணுங்கள்
கல்வி தன்னால் உயர்வு வரும் என்பதை உணர்த்திடுங்கள்

கூடிக் களித்திடும் கொண்டாட்ட நாட்களிலும்
வீட்டில் நடக்கும் வைபவங்கள் தன்னிலும்
பாழ்படும் போதை, கசிப்பு, கள் எதுவும்
எடுப்பதேயில்லை என்ற முடிவுக்கு வாருங்கள்

முன்னேற்றம் வாழ்வில் நமக்கும் இனி வேண்டும்
முன்னோர் வீழ்ந்த படுபாதாளம் அறிந்து தவிர்த்தே
கல்விக் கண்களை இளவல்களுக்குத் திறந்து விட்டு
கண்கூடாகக் காணும் நல் எதிர்காலம் அமைத்திடுங்கள்!!!

*- பூங்காவனம்*

# 37 மாண்புமிகு துணைவி

மனைவியாய் வாய்க்கப் பெற்றவல் அவள்
மாண்பு மிகு துணைவியாய் அமைந்து நின்றாள்
ஆசிரியை கடமைதனை ஆர்வமாய்ச் செய்ததுடன்
அடுக்களை வேலை அனைத்தும் அவளால் ஆயிற்றே

இல்லத்தின் மனையாளாய்க் குழந்தை இரண்டை
ஈன்றெடுத்துப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்தவள்
முகம் கோணாது புருஷன் தேவையில் பூர்த்தி கண்டனள்
முற்றிலும் அவனில் அன்பையும் சொரிந்திட்டாள்

பாராட்டும் படியான சேவையை அதிபர் தரத்தினில்
பாங்காகப் புருஷன் கண்டிடச் சுதந்திரம் அளித்தனள்
பெண் அவள் பின்னணியில் கணவனின் கை ஆகின்
பண்புடன் கருமம் ஆற்ற அவனால் முடியும் ஆதர்சம் அவள் ஆனாள்

தம்பதிகள் வருமானம் தம்மிடத்தில் வைத்திருந்து
தருமமும் செலவினமும் இன்னவாறென்றெழுதி மாதமுடிவில்
தன் எழுத்தில் சமர்ப்பிப்பாள் கணவனும் அகமகிழ்வான்
தக்க படி செலவு செய்ய வல்லமையும் பெற்றிருந்தாள்

அக்கம் பக்கத்தார் அன்னவள் தான் மனையாட்டி என்றிடற்கு
பக்க பலம் தந்ததனால் மற்றோரும் சேர்ந்து நின்று
படிப்பினைகள் அவளிடமே தேடிக் கற்றிடற்கு முனைந்து
பல பெண்கள் பயன்களைத் தாம் அவளிடமே பெற்றனர் காண்

*- ஞாயிறு தினகரன்*

# 38 தாய் ஆவாள் பெண்

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த குழந்தையைத்
தொட்டிலாட்டும் கை நாடாளும் கை என்பதனால்
தாய்மைக்கு நிகரேது? உயர் ஸ்தானத்தில்
தன் மகவை உயர்த்தி வைத்து ஏற்றம் தருபவள் தாய்

தாய்மையடைதல் பெண்ணுக்கு உயர்வு தருவதாம்
அரசனாயினும் தாய்க்கு மகனே எனும் கூற்றும்
அத்தகைய உயர் நிலையில் தாயின் மதிப்பைக் கூறுவதாம்
அதனாலன்றோ பெண் என்றால் பேயும் இரங்கும் என்றனர்

தாயின் பாதத்தடியில் சுவர்க்கம் இருக்கிறது என்பது நபிமொழி
தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என்றே
தாய்க்கு முதலிடம் கொடுத்தாள் ஔவை பிராட்டி
பெண் என்றால் பேதமை என்பது மூடர் கூற்று
பெண் இல்லை என்றால் ஆண்வர்க்கம் தோன்றிடுமா?

பெண்மைக்கு முதலிடம் தந்தாக வேண்டும்
பெண் என்பவள் தாய் ஆகி தன் உதிரத்தை பாலாய் மகவுக்கு
பருகக்கொடுத்து கண்ணெனக் காத்ததனால் சமுதாயம்
உருவாகி உயர்ந்தோங்க வைத்தவள் பெண்ணே ஆவாள்

ஒவ்வொரு பெண்ணும் தாயானவள் தன்னைத் தொடரும்
நிழல் எனக் கண்டு குழந்தையை போற்றிக் காத்து உருவாக்குகிறாள்
ஒவ்வொரு மகவும் இவ்வாறு உருவாகியமை நினைந்து
ஒவ்வா உவமைப் பெண்ணாள் தன்னை ஏற்றிப் போற்றி
அவ்வுயர்வை அவர்க்களித்து மகிமை செய்தல் அனைவர்க்கும் கடனே!!!

- பூங்காவனம்

# 39 கல்வி பெற்றால்

கல்வி கை நழுவிய சொத்து
காணுமிடத்தில் கைப்பற்றிக் கொள்க!
கண்ணியமாயச சொன்னவர் நபிகளார்
கடைப்பிடிக்கின்றோமோ? அவர்கள் ஏவலை

கல்வி கரையில கற்பவர் நாட்சில
கண்டு சொன்னவர் ஒளவை
கண்டு கொண்டோமானால் உண்மை
கொண்டு நடத்திட முனைந்திடுவோம்.

பண்டு தொட்டு இலங்கும் உலகு
பயின்ற கல்வி தன்னால் ஏற்றம்
உண்டானதில் உயர்வு கண்டோம்
இன்றும் வளர்ச்சிப் பாதையிலே கல்வியால்

கல்வி பெறின் உயர்வு உறுதி
கண்கெட்டவன் நிலை கல்வியற்றோன்
கடிதில் நிலைமை உணர்ந்து கொண்டு
காசினியில் கல்வி பெற முனைந்திடுக!

வாஞ்சை கொள்ளும் பெற்றோர்
வல்ல ஆசிரிய வாண்மையாளரை
விரும்பித் தம் பிள்ளைகளை விட்டே
வல்ல கல்வியைப் பெறவைத்தல் கடனாம்.

*- ஞாயிறு தினகரன்*

# 40 கல்வி - சௌக்கியம்

கல்வி, சௌக்கியம் இரண்டும் முக்கிய தேவைகள்
காணும் மக்கள் அனைவோர் உடம்பும் சுகத்தில் ஆயின்
கனிவாய்ப் பொருள் செல்வம் மிகைத்து நின்று நாடே
இனிய வளம் கண்டு மக்கள் சுபீட்சம் உற்றிடுவர்

கல்விச் செல்வம் அறிவு விருத்தியைத் தந்து நிற்பதால்
பல்விதத்துறையிலும் நிபுணர்கள் தோன்றிடச் செய்து
பக்க பலம் தந்து பொருள் வளம் மேலோங்கிடவே
எக்காலமும் அழியாத செல்வந்த நாடாய் தாயகம் மிளிர்ந்திடுமே!

முக்கிய தேவை இவை எனக் கண்டு ஆட்சியினர்தாம்
தக்க விதமாய் கல்வி, சௌக்கியம் இரண்டிற்கும்
துக்கமின்றிப் பெருத்த முதலீடு கொண்டு செலவினை
ஊக்கமுடன் செய்து இத்துறைகளை மேம்படவே வைத்திடுவர்

ஆயின் எம்மவர் வாழ்வில் சுகத்தினைப் பேணிட
அரிய வழி இ:.தென உணர்ந்து அன்றாட வாழ்வில்
சீர்நெறியைப் பின்பற்றி உணவு முதல் மற்றும் செய்கையில்
பரிவுடன் நடந்து மேம்பட எத்தனை பேர்தான் முனைந்திடுவர்?

கல்வி, தம்மைக் கைதூக்கிவிடும் என உணர்ந்து
கற்றலில் ஊக்கம் கொள்வோர் அத்தனைபேரும் உளரா?
முன்வரும் சமுதாயம் மேலோங்கிட நாட்டம் வைத்து
தம் சிறார்களைக் கல்வியில் உயர்த்திட வைப்பரா இவர்கள்?

- சுடர் ஒளி

# 41 கத்திக்கு ஒரு புத்தி

கத்தியே உனக்கு வெட்டத் தெரியும்
காட்டை வெட்டலாம். விறகும் வெட்டலாம்
கம்பும் வெட்டலாம் அது தேவை
மாறாகக் கையைப் பதம் பார்க்கிறாய்
இதில் என்ன நியாயம் இருக்கிறது?

சில மனிதர் சொல்வதையும் செய்வதையும் போல்
பல கடமைகளும் ஏலவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.
பாவிகள் மாற்றமாகத்தான் செய்வார்கள்
கத்தியே நீயும் அப்படிப்பட்டவர் நிழலிலா வாழ்கிறாய்?
கழுத்தில் வெட்டவும் துணிகிறாய்.
இதுதான் காரணமோ?

உன்னுடன் சகவாசம் வைப்பது ஆபத்து என்கின்றேன்
என்னென்ன பாதிப்புகள் உண்டாக்க முனைவாயோ?
உன் கடமையை நீ சரி வரச் செய்ய நீ முதலில் கற்றுக்கொள்.
அப்பால் செயலில் இறங்கு – இன்றேல்
நீயும் வஞ்சகர் கூட்டத்தில் மதிக்கப்படுவாய்!

- ஞாயிறு சுடர் ஒளி

# 42 இரங்கல்

நிறை குடமாய் வாழ்ந்தவர் எஸ். எச். எம். ஜெமீல்
நினைவை விட்டகலாதவராய் உள்ளவர் அவர்
நிறைவாய் மனங்களைப் பற்றிப் பிடித்துள்ளார்
குறைகுடம் அல்லர்.. தளம்பல் அவரிடம் இல்லை!

மரணம் மனிதனின் இயல்பு ஆட்பட்டுவிட்டார்
இரணம் குறைந்ததும் மனிதன் மரணத்தில் ஆழ்வான்
கரணம் அடிக்காத கள்ளங்கபடமற்ற பெரியவர்
இரங்குதல் காட்டி நிற்கின்றோம் யாம் எல்லாம்!

இகத்தில் வாழ்வாங்கு வாழ்தலில் நிறைவு கண்டவர்
இலட்சியத்தை வாழ்வுதனில் பூர்த்தி செய்தவர்
பலரையும் வழிப்படுத்திப் பல்துறையையும் சீர் செய்தவர்
பாங்காய் நாம் போற்றிடக் காரணர் ஆயிருந்தவர்!

கதுல்வித் துறையில் ஏற்றம் கண்டு நின்ற அவர்
கல்வியால் கண்ட பயன் நாடடையச் செய்தவர்
சமூகம் விழிப்புப் பெறப் பல்துறையிலும் உழைத்தவர்
சகஜமாய் உற்ற இழப்பு எனினும் நாம் படும் துயர் எல்லைகாணா?

அனைவரையும் தூக்கிவிட அரும்பாடுபட்டார்
அவர் அரவணைப்பில் குளிர் காயாத இலக்கியக்காரர் இல்லை
அல்லாஹ்வே! இத்தகு தியாக சிந்தை நிறை ஜெமீல் அவர்களை
வல்லான் நீ பிர்தெளஸ் சுவர்க்கமதில் நுழைத்துவிடு ரஹ்மானே!!!

- பூங்காவனம்

# 43 நான் எனது

"நான்" இன்றி ஆகாது என்பர்
என்னால் தான் இதுவும் என்றிடுவர்
"நான்" என்ற ஆணவம் எவ்வாறெல்லாம்
அரசோச்சி ஆள முனைகிறது  எனினும்

அகங்காரம் ஆணவம் காண்பிக்கும் "நான்"
என்றென்றும் இருந்தாக வேண்டும்!
நின்று அழியும் உடம்பை "நான்"என
உயர்த்திப் பேசிப் பெருமை கொள்வதா?

"நான்" யார்? எது? எங்குளது?
இந்த உடம்பிலா?உயிரிலா?
எந்த உள்ளத்தில் புரியவில்லை அழிவற்ற
"நான்" எங்கே என்பதைத் தேடின் காண்பதற்கில்லை

நான் உடலில் அன்று உயிரில் எனின்
உயிரைத் தேடல் அவசியம்
உயிர் உள்ளம் தனில் ஆயின் உள்ளம் எங்கே
உயிரும் உள்ளமும் கண்ணால் காணவும் ஆகாதன

உடம்போ அழியும் ஒரு தோற்றம்
உண்மை இஃது உறுதி  ஆதலின்
உடம்புக்கு "நான்" என்ற மமதை தேவையா?
நான் எனும் ஆணவம் வெறும் மாயை

நான் மாயை எனின் எனது?
எனது என்பதும் ஏற்க முடியாதது
"நான் மாயை வெற்று மொழி ஆயின்
எனது என்று எப்படி ஆகலாம்?

- ஞாயிறு தினகரன்

# 44 வெற்றிலை வேண்டாம்!

வெற்றிலை வெறுமை இலை தான்
வெற்றிடமாக்கிடும் வாழ்வை
வந்திடின் வாய்ப்புற்று நோய்
வென்றிடல் யார்க்கும் அரிதாகுமே!

வெற்றிலை பிடித்துச் சுண்ணாம்பு பூசி
வகையாய்ப் புகையிலை சுருட்டி
வாய்க்குள் திணித்துக் குதப்புவதால்
வந்திடும் இன்பம் போன்றதா அந்நோய்?

இலங்கை, கொழும்பு, யாழ்பாணம்,
மலையகம் தனில்
இந்நோயின் அதிகரிப்பினால் துன்பம்
உற்றிடுமச் சோதரர் வாழ்வினைப் பாரீர்

குற்ற உணர்வு கொண்டு
வெற்றிலை தவிர்த்திட வாரீர்
வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல்
வந்த நோயின் கொடூரம் தன்னால்
வாழும் குடும்பமும் துன்பத்தில் ஆனதே!

வெற்றிலையை விட்டிடின் வெற்றயும் அனுகிடும்.
போதைப் பொருள் தனில் முதல் இடம்
புத்திக்கு எட்டாது! வெற்றிலைதான்
பல்வேறு தீங்கினை அது தந்திடலால்
போதைப் பொருள்தான் எனக்கருதிடல் காணீர்

- சுடர் ஒளி

# 45 ஆசிரிய வாண்மையினரே!

எவ்வெவரும் எத்தகைய பதவி வகித்திடினும்
அவரோ ஆசிரியர்களால் உருவாக்கம் பெற்றவராம்
ஆசிரியர்களை அனைவரும் மதிக்கவே செய்திடுவர்
இவ்வுயர் நிலை தெரிந்துள்ளோர் ஆசிரியவாண்மை
எத்தகு மகிமை உடைத்து என்பதனை அறிந்திடுவர்
தாயின் மடியினிலே தந்தை வழி நடத்தலிலே
தகைமை கண்ட குழவி பாலகரானதும் பள்ளியில்
படியேறியது முதல் ஆசிரியரிடம் பயில்வதே முறை
வருடங்கள் பத்து தாண்டியும் பாடசாலையில்
வரும் பிள்ளையை முன்னெடுத்துச் செல்லும்
பணி தொடர்கிறது
இவ்வளவு காலத்தை ஆசிரியரிடம் செலவு செய்து
ஒவ்வொரு துறையிலும் தம்மை தயார் செய்திடுவர்
இத்தகு வழிகாட்டும் ஆசிரிய வாண்மையினர்
தத்தமது நிலை பற்றிச் சற்றுச் சிந்திக்கக்கடவதாக!
ஆசிரிய வாண்மைத் தொழிலென்று கருதற்க!
இங்கே வாண்மைச் சேவைகளுள் ஆசிரிய வாண்மைக்கே முதலிடம்
எங்கு நாம் சென்று சேவை ஆற்றிடினும்
சம்பளம் பெறும் உத்தியோகம் எனக்கருதற்க
வம்பளந்து காலம் தள்ளுவதும் நோக்கமன்று
அர்ப்பணிப்புடன் சேவையாற்றி நின்று
சீரான சமூக உருவாக்கம் நடந்திடற்கு
சிறப்பு முன் மாதிரி ஆசிரிய நடத்தையில் காட்டி நின்று
உறுதியான போதனை சிறார்க்கு ஊட்டியே தான்
அன்பு ஆதரவுடன் அவர்களை வழி நடத்த
ஆவன செய்து கொள்க! ஆசிரிய வாண்மையினரே!
நல்ல மனப்பாங்கினை வளர்த்தெடுத்தல் முதற்கடமை.
நலிந்தோரையும் உறுதியுடன் செயற்பட வைத்து
நன்முறையில் திறமையை வளர்த்திடவும் ஆவன செய்திடுக!
நாளொரு வண்ணம் அறிவு முதிர்ச்சி பெறவே வழிசெய்க!
இத்தகு கடமைகளை ஒழுங்குற நிறைவேற்றின்
இங்கு நற்பிரஜை உருவாகி நாடு சிறக்கும்
அனைவோர்க்கும் பயனுண்டே!

- சுடர் ஒளி

# 46 சுகபோகம் வேண்டாம்

சுகபோக வாழ்விலே மிதக்கின்றீர்
சமமாக இந்நிலை எந்நாளும் வாய்த்திடுமா?
இடாம்பீகம், பகட்டு எத்துணைகாலம் நிலைக்குமோ?
இறப்பின் பின்இவை நம்முடன் கூடவருமா?

மனிதன் எளியவனைத் துச்சமாக கருதல் ஆகா
மாண்பும் வளமும் அன்னவர்க்கும் கிட்டிடலாம்
முன் வளவாழ்வு வாழ்ந்தவன் மண்டியிடவும் நேரலாம்
மனித வாழ்வு இ:.தென உணர்ந்து வாழ்தல் அவசியம்

கூன்,குருடு, முடம் உள்ளோர் வாழ்வு
உன்னில் சிந்தனையைத் தூண்ட வேண்டும்
அன்னவர் வழ்வுக்கு துணையாதல் அவசியம்
அன்பான ஆறுதல் கூறிடலும் நம் கடனே!

எச்செயல் செய்கின்றார் என்றாய்தல் தேவை
பச்சையாகச் சொன்னால் வட்டிக்கும் கொடுப்பர் தாம்
பிச்சை கேட்கும் மனித கூட்டமும் உளர் – அவர்
எச்சரிக்கை வங்கியிலும் அவர் பணம் குட்டிபோடுகிறது

அங்கவீனர், உண்மை நோயாளி, வறியோர்
எங்கும் இனங்கண்டு உதவுதல் அத்தியாவசியம்
பணம் உள்ளோர் சுகபோகம் விட்டொழித்து
குணம் காட்டி உதவிகளைப் புரிந்து நிற்பீர்!

- ஞாயிறு தினகரன்

# 47 கல்வி வளர ஆவன செய்க

கல்வியா பணம் பொருளா எது தேவை?
கல்வி பணம் பொருள் எல்லாம் தேவைதான்
கல்வியின்றியும் பணம்
பொருள் உண்டெனில் வாழலாம்.
உல்லாசமாய் வாழ்வைக் கழிக்க
பணந்தான் முக்கியம் என்றிடுவர்

இப்படியொரு கருத்து
இலங்கை முஸ்லிம்களிடம் உளது
அவ்வாறுளதால்
கல்வியினைப் புறந்தள்ளுகின்றனர்
பணம் சம்பாதிக்கவும்
கல்வி இன்று அடிப்படை
பண்பாய் உணராததால்
கல்வியைப் புறக்கணிக்கின்றனர்

முன்னோர் காலம் கல்வியின்றியும்
வாணிபம் செய்தனர்
நன்றாய்ப் பொருளீட்டி
வளமான வாழ்வும் கண்டனர்
இன்றும் இனி வரும் காலமும்
வாணிபமும் தொழில் செய்திடற்கு
நன்றாய் கற்றிடல் அவசியம்
என்றுணரவும் தெரியலையே

முஸ்லிம் கலைக் கூடங்களில்
பெறுபேற்று நிலை
பின் நோக்கிச் செல்லும்
நம்மினத்தோர் நிலை ஏதாகும்?
படிப்பின்றேல்
அடிமையாய் – இழி
நிலைக்குத் தள்ளப்படவும் கூடும்

மதப்பெரியார் சமூகத்தலைவர்
அரசியல் தலைவர்
உதறித் தள்ளும்
கல்வியை ஏன்
காணாதுள்ளனரோ?
ஓர்மைப்பட்டு சமுதாயம்
தலைதூக்கி நின்றிட
கருமம் ஆற்றிடல் – கல்வியை
வளர்த்திடல் அவர்களின் கடனேயன்றோ?
சித்தி லெவ்வை தொட்டு
ஏ. எம். ஏ. அஸீஸ் வரை
சிந்திக்கும் செயல்களை
இத்துறையில் ஆற்றியுளரே!
எத்திக்கும் இலங்கையில்
சென்றுழைத்த முஸ்லிம் அரசியல்வாதிகள்
சப்தமிட்டுக் கூறிச் சமுதாயத்தில்
கல்வியை உயர்த்தி நின்றனரே!

- எங்கள் தேசம்

# 48 இறையச்சம் ஈமானின்றேல் சோதனைகள், அனர்த்தங்கள்..

இஸ்லாத்தின் அடிப்படை விசுவாசம்
இறைவிசுவாசம் அகன்றிடில் அவன் குபிருள் ஆகிறான்
இறை மறை கூறுவன சான்றுகள்
மனிதனானவன் வறுமை, குழந்தை, செல்வம் தம்மால்
புடம்போடப்பட்டு ஈமான் மேலும் உறுதியடைகிறது
அனர்த்தங்களும் மனிதனுக்குப் படிப்பினை தான்.
அளவற்ற உலக ஆசை அங்கிங்கெணாதபடி முனைப்புடன்
அலைந்து செல்வம், பதவி, பவிசு தேடுவதல்லால்
ஆண்டவனை நினைத்திடாத இளெகீகப் பற்று
அனைத்தையும் உடைத்தெறிய அனர்த்தம் வருகிறது
வெள்ளப்பிரளயம், நிலநடுக்கம், சுனாமிப் பேரலை
வன்மையான சூறாவளி, அழிவுதரும் பரவுநோய்கள் என்றே
எண்ணிட முடியாத அனர்த்தங்கள் உலகில் நடந்துளவே
மண்ணில் மேலும் நடந்த வண்ணமும் உளவாம்
நபிமார் சரித்திரங்கள் நமக்குப் படிப்பினைகளாய்
நன்றே கூறிக் காட்டுவதையும் ஊன்றியே நோக்கிடுக!
மூஸா நபியை ஏற்காது நான் ஆண்டவன் எனும் பிர்அவ்ன்
முழுதாக நைல் நதியில் மூழ்கடிக்கப்பட்டே அழிந்தான்
தாவூது நபியின் “கவும்“களும் வர்த்தகத்தில் ஏமாற்றுத்
தந்துமே மோசடி புரியச் சூறாவளியில் சிக்குண்டனர்.
நூஹ் நபி காலச் சமூகம் வெள்ளத்தில் சிக்குண்டு சிதறு பட்டன
நூஹ் நபி புதல்வரும் ஈமானின்றித் தூள்தூளாகிப் போய் விட்டார்.
என்றென்றும் இறை நம்பிக்கை, இறையச்சம் மனதிலே
நன்றாகப் பதிந்திடற்கு வழி தேடுங்கள்.
அவனன்றி அணுவும் அசையாது எனும் கோட்பாடு
அணுவளவும் பிசகாது மனத்தில் இருத்தி இறை நம்பிக்கையில்
அன்றாடம் இறைவனைத் தொழுதேத்தல் நம் கடமை
சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெறுவதற்கும் சீரான
சீவியம் உவப்புடன் வந்தமைதற்கும் அல்லாஹ்வை
நிதம் பிரார்த்தனை செய்தலும் தேவையாகும்
நலமாய் இறையச்சத்துடன் இவற்றைச் செய்தாலே ஏற்றம் வரும்.

- முஸ்லிம் முரசு

# 49 பயிர் தரும் பாடம்

பசுமைத் தோட்டம் பாங்காய்த் தெரியுது
பயிர்கள் வளர்த்தால் பயன்கள் பெருகுது
பல பயிர் ஒன்றாய் ஒரு வளவுள் வளருது காண்
பிரிவோ மோதலோ ஆங்கில்லை என்பது கேள்.

மரமாய் செடியாய் கொடியாய் பலவும் அங்குளவே
பரவியே பயிர்கள் பல்லினம் ஒன்றாய் வாழ்ந்திடுதே
தரவுகள் கணித்துப் பார்ப்பின் ஆங்கு பயிரினம் பதினைந்தே
தங்களுக்கிடையில் பிரிவினை பேதம் கோஷங்கள் எழவிலையே!

மனிதனால் விளையும் பயிர்களே பாடம் சொல்லிடுது
மக்களாய்ப் பிறந்தும் மாக்களாய் வாழ்க்கை அமைந்திடுது
மிகை அறிவாலே சிந்திக்க அவன் மனம் தவறிடுது
மிருகங்களாகி ஒன்றையொன்று தாம் அழித்திடுது.

*- ஞாயிறு தினகரன்*

# 50 இறைகட்டளையைப் பிசகற நிறைவேற்றி...

இணையிலா இறையோன் கட்டளையதனை
இனிதே பிசகற முடிக்கும் வல்லோர்
மனிதர் அறிவர் மாண்புறும் மலா இக்காமார்
மழையை வருஷிக்க மீக்காயீல் உள்ளனர்!

பெருமழை பெய்து பெரும் பிரளயமாயினும்
இறை நியதியின்றி வேறிலை காண்பீர்
சிறுசிறு மழையினால் பல பயிர் வளர
முறைமுறையாக வகுத்தவன் விதித்ததைச் செய்திடுவர்!

ஏகனாம் அல்லாஹ் இடும் கட்டளை பணிகள்
ஏகமாய்த் தொடுத்து முடிப்பவர் வானவர் ஜிப்ரீல்
ஆகமங்கள் ரசூலானோர்க்குக் கொணர்ந்தார் அன்னவர்
ஏகனின் மலாஇக்காமார் எமது எண்ணிக்கையுடன் அடங்கார்!

பெருங்காற்றுச் சுழன்றடித்துச் சிதறிடவே
பருவ நிலையில் மாற்றம் வந்தமைந்திடும்
வல்லான் இஸ்ராபீலைப் பணிந்திட ஆயிற்று
எல்லாமே முடிந்திடும் நிலையும் ஒருநாளில் ஆகும்!

உயிரைப் பறித்திடும் இஸ்ராயீல் தானும்
உள்ளதை உள்ளவாறே செய்பவர் அன்றோ?
பெரியவன் கட்டளையைப் பெரிதாய் மதிப்பர்
பெரியவர் சிறியவர் எவர் உயிரையும் பறிப்பர்!

இவ்வாறே கருமம் அனைத்தையும் ஒழுங்கில்
அவ்விதம் ஆக்கிடும ஏவலர் மலக்குகள்
அல்லாஹ்வின் ஆணையை அனுதினம் பேணுவர்
நல்லதும் ஆக்குவர் துயரமும் விளையலாம்!

மனிதனையும் படைத்தான் இறையோன் அவனே
மாண்புற வாழவும் வழிகளை விதித்தனன்
உண்மையாய் இறைகட்டளை பேணிடவே
எண்ணித் துணிந்தோராய் நாமும் ஆகுவோம்

- *ஞாயிறு வீரகேசரி*

# 51 அருள் மிகு ரமழான்

அருள் மிகுந்த ரமழான் மாதம் உதித்தது
சிறப்புப் பல கொண்டிலங்கும் ரமழான் பிறந்தது
நோன்பதை நோற்பதால் இறையருள் கிட்டிடும்
மாண்பினை உணர்ந்து நாம் நோன்பினை நோற்போமே!

இறைமறை குர்ஆன் ரமழானில் இறக்கிட
இறைவனின் நாட்டம் போல் நோன்பதை நோற்கவும்
மறையுடை ரஹ்மான் கட்டளை தந்தனன்
கறையெல்லாம் அகன்றிட தூய ரமழான் வந்ததே!

ரமழான் தனில் சுவர்க்கமும் திறந்திட
நாமெல்லாம் மூடிடும் நரகதை எட்டாமல் நின்றிட
நன்மைகள் செய்வதால் நாயனின் நன்கொடை
எண்ணிலாத் தொகையிலே நம்மிடம் வந்திடும்

நோன்பது எனக்குளது என்கிறான் இறை அவன்
நன்மைகள் சொரிவதும் என் கடன் என்றிட்டான்
நாயனின் அருளினை அளவின்றிப் பெறுதற்கே
நம்மை வந்தடைந்த ரமழானும் பாக்கியம் தானன்றோ?

ஷைத்தானை விலங்கிடும் மாதமும் ரமழான் தான்
செய்த பாவங்களை மன்னித்தலும் இந்நாளில் உண்டு
"தக்வா" துறைப் பயிற்சியை ரமழானில் பெறுவதால்
முக்தி அடைந்திட மோட்சம் கிடைத்திட வழி துலங்கும்

ஆயிரம் மாதங்களிலும் சிறந்த இரவொன்று உண்டு
அழகான லைலத்துல் கத்ர் இரவதே ரமழானில்
உள்ளடங்கி உளதும் நமக்கு ஏற்றமேயன்றோ?
அல்லாஹ்வின் அருளை நினைத்து நாம் போற்றுவோம்

- ஞாயிறு தினக்குரல்

# 59 தேவை நல்லொழுக்கம்

நல்ல பிள்ளை என்ற பெயர் எடுக்கனும்
நல்ல செயல்கள் செய்து நாம் பழகனும்
நல்லவளாய் வாழ்ந்திட்டால் உலகம் நம்மை மதித்திடும்
நாடுபோற்ற வாழ்ந்திடவே வழிதனை அமைக்கனும்

கற்றாய்ந்தொழுகு! என்பது காண்பீரே!
கல்வி ஒன்றே அழியாத செல்வமாகும்
கற்றபின் அதன்படி நடத்தலே தேவையாம்
கடவுளைத் துதித்திடவும் கல்வி வழிகாட்டிடும்.

பெற்றோரைப் பணிந்து நாம் வாழ்ந்திடல்
மற்றோரில் முதியோரை மதித்திட முனைந்திடல்
மானிட வழ்விலே உயர்ந்த பண்பாகும்.
புனிதராய் வாழ்ந்திடப் பாலர் நாம் பயில்வோமே!

- சுடர் ஒளி

# 53 அன்றும் இன்றும்

ஆங்கே தொலை தூரம் இருந்து வந்தனர் அன்று
இங்குற்றோர் அடைக்கலம் தத்தனர்
வர்த்தகம் அவர் தொழில் வாய்த்தது
பூர்வீகம் அரேபியா அரசன் ஆதரித்தனன்

நம்பிக்கை நாணயம் நிலைக்களன்
நல்லோர் என்ற நாமம்சான்றாயிற்று
அநுராதபுர அரசனும் அவையில் ஏற்றினன்
ஆலோசகர், வைத்தியர், மந்திரி என்றும் ஆயினர்

பேருவளை வத்திமி அரசனானவன்
சிறையில் அடைபட்டோர்முஸ்லிம்கள் அறிந்தனன்
உசாவித் தெளிந்து விடுதலை நல்கினன்
சோதரியாளை மணமுடித்தும் வைத்தனன்

பங்கரகம்மன அரசன் ஈந்த ஊர்
பக்க பலம் தந்த முஸ்லிம் மக்கள்
தக்கவிதம் வாழ்ந்திடட்டும்! என்றளித்தனன்
புக்ககம் எவ்வாறு அமைந்தது எனக் கூறுவரா? இவர்கள்

பள்ளியை உடைத்தனன் என்போர் ஈங்கே
பவிசுகள் கிடைத்திடும் என்ற கனவிலா வாய் வீச்சு
இணங்கி நடந்திட வழிதான் ஏது?
இசைவுறத் தேடல் முஸ்லிமின் கடனாம்

ஈமான் இறையச்சம் உறுதி எனில் தான்
இகத்தில் முஸ்லிமின் வாழ்வு சிறக்கும்
இறையைத் தொழுது பிரார்த்தித்தல் முதற்கடன்
"பத்ர் களம் வெற்றிக் கண்டமை தனை நோக்குமின்.

குதர்க்கம் விதண்டாவாதம் தேவையற்றது
பதவி இருப்பைக் காத்திட இறைதுணையே தேவை
சமரசம் கண்டிட வழிதனைக் காண்பீர்
அந்நியர் நாடதில் இணங்கி வாழ்தலே இஸ்லாம் வழி என்பீர்

*- முஸ்லிம் முரசு*

# 64 வாழ்வு - இரு பார்வை

நான் ஒரு பாவியென மனம் உறுத்துது
உனது உயர்வை நாம் அறிவோம் என்கின்றனர் பலர்
மனித வாழ்வின் இருதிசைப் பார்வை இவை
எனது மனம் என்னை முற்றாக அறிந்துள்ளதே!

பிறர் பார்வையில் நான் அறிவு நிறைந்தவன்
பிறர் நலன்களில் அக்கறையுடன் செயற்படுபவன்
உறுத்துது மனம் நான் ஒரு சுயநலன் என
மறுக்கவியலாது வஞ்சகத்தனம் உள்ளவன் என்பதும்

இறையைத் தொழுபவன் என்பர் பலரும்
இறை நினைப்பைத் தாண்டி
தொழுகையில் மனம் – எங்கோ ஓடும்
பக்தியுள்ளவன் எனப் பார்ப்பவர் பகர்வர்
பகல் வேஷம் என மனம் நச்சரிக்கும்

பக்குவமில்லா நிலையிலே நான்
பைத்தியமே பிடித்திடும் நித்தம் சிந்திப்பின்
நீசர் என யாரும் கூறார் மனச் சாட்சியோ
நீசத்தனம் கொண்டவன் என உறுத்தி நிற்குது

என் வாழ்வு இருவகையில் தென்படுதே!
மண்ணில் மனிதர் காண்பதொன்று
மனமறியும் உள்ளத்துள்ளதும் நகர்வும்
மாற்றார் அறியார் மனம் கூறுபவை

- எங்கள் தேசம்

# 66 இறைவன் மனிதன் சமமன்று

மாபெரும் வல்லமையாளன் படைத்திட்டான் உலகை
மண்ணில் காணும் சீவராசிகளைப் படைத்தவனும் இறைவனே!
மனிதனை இன்று படைப்பவனாய்க் காட்டி
மனிதனும் "சிருஷ்டி கர்த்தா என்றிடல் தகுமா?

இறைவன் தந்த ஆற்றலினால் மனிதன் இங்கு
மறைவாய் இருந்த சிலதை வெளியே கொண்டுவந்தான்
மறை கூறும் மனித இனம் சிருஷ்டிகளில் உயர்ந்ததாய்
இறைவன் ஆக்கினான் உலகில் ஆற்றலும் வழங்கினான்

மாபெரியோன் இறைவன் தனக்கு சமமாய் மனிதனை
மானிலத்தில் கருமம் செய்ய விட்டிடவில்லை ஆயின்
மனிதனால் உயிர் கொடுத்துச் சிருஷ்டிக்க முடியுமா?
மண்ணில் இயற்கை அனர்த்தம் மனித சக்தியை மீறினதில்லையா?

இவர் இன்று பிறப்பவர் இவர் மரணம்
இவ்விதம் நிகழும் இந்நாளில் நிகழும்
என்றுரைக்கும வல்லவர் யாரும் உள்ளனரா?
சோதிடம் கூறுபவர் தானும் இதனை உணர்த்திடுவாரா?

எங்கும் எப்பொழுதும் பெரியவன் இறைவனே!
பாங்குற இறைவன் கட்டளை மீறாது நடந்திடல்
எங்கள் அனைவோர் கடமை என்பதுணர்வோம்
ஏகனைவழுத்தி வணங்கி வாழ்ந்திடத் துணிவோம்

- எங்கள் தேசம்

# 56 மாற்றங்கள்

மாற்றங்கள் நடந்தேறல் இயல்பு நிகழ்வதாம்
மனித வாழ்வில் மாண்புறு இயற்கை தம்மில்
மிருகம், பறவை மற்றும் உயிரினங்களில்
நிலம், நீர், கடல், மலை அமைப்பில் எங்கும் மாற்றங்கள்

உண்ணும் உணவில் அணியும் ஆடையில்
உற்றிடும் மாற்றம் கால ஓட்டத்தில் தெரியும்
கலாசாரம், பழக்கவழக்கம் மனித சமூக
அமைப்புகள் எங்கிலும் மாற்றங்கள் உண்டாமே!

மிருகம், பறவை உயிரினங்கள் கூட
இருப்பிடம் உணவை மாற்றிடும் பாங்கை
உருப்படும் உணவை மாற்றீடாய் அருந்தலும்
பருவகாலம் ஒட்டி வாழ்வு முறை திருப்பமும் காணலாம்

நிலமோ, நீரோ கடலால் உட்கொண்டிடல்
நீர் நிலைகள் நிலமாய் ஆகித் தோற்றம் கண்டிடல்
காடு, வனம், மலை நாடாய் நகராய் அமைந்திட
பாடாய் அமைந்த ஊர்கள் சிதைந்து காடாய் ஆகிடுதல் மாற்றமே!

மனிதப் போர்கள் பயங்கர மாற்றம் உண்டு பண்ணுது
புனித நிலையைச் சீர் குலைத்து நாடு நகர் அழித்து
ஆட்சியாளர் தொடுக்கும் போரில் மக்கள் அழிந்து பட்டு
அல்லற்பட்டு இல்லம், நிலம் இழந்து அகதிகள்,
அங்கவீனர் ஆவதும் மாற்றமேயன்றோ?

- ஔசை

# 57 சோம்பல்

காலை ஆயிற்று துயில் எழவில்லை
கவனமாய்க் காரியம் முடிப்பதாய்ச் சொன்னாய்
உரியபகுதியை நிறைவாகப் படித்தால் தடைதாண்டும்
பரீட்சையில் தேறுவது சுலபம் என்றாய்
எனினும் இன்னும் துயில் எழவேயில்லை.

வீட்டுக் கருமம் அனைத்தையும் செய்யவும்
வாகனம் பழுது அதனைத் திருத்தச் செல்லவும்
கூட்டம் நடாத்த விடுத்த அழைப்பினால்
விருப்புடன் சபையை நடாத்தி முடிக்க
எண்ணிச் சகலதையும் செய்யவே நீ (இன்னும்)

அன்றாடக் கருமம் அதிகம் உண்டு
ஆடை கழுவிக் காய்த்தல் அவசியம்
வீட்டைக் கூட்டித் துப்புரவாக்கல்
கடையல் போய்ச் சாமான் வாங்கிட
காலைக் கடன்களை முடித்துச் செய்ய (இன்னும்)

ஒவ்வொரு நாளின்கருமம் யாவும்
எவ்விதம் என்று அட்டவணையின்றேல்
சரியாக வேலைகள் முடித்திடலாகா
கருமம் எதனையும் மனதில் நுழைத்து
உரைத்தால் மாத்திரம் காரியம் ஆமோ? (இன்னும்)

- ஔசை

# 58 வங்கியில் இலட்சம் பல

நம் இஸ்லாம் தூய மதம் கூறும் விதம்
நாம் ஸதகா – ஸகாத் வழங்குதல் கடமை எனினும் எங்கிருந்தோ
வந்து இரந்து நின்ற எவரோ காட்டரபி அன்னவர்க்கு நபி
சொன்னது எது? கோடரி ஒன்றைக் கரத்திலே எடுத்துக்
கம்பீரமாய் மொழிந்தார்கள் காட்டரபியிடம் இதனை ஏந்தியே கானகம்
செல்வீர்! இனிதாய் விறகு வெட்டி விற்றே சீவிப்பீர்!ஐயமிட்டுண்! என்றார் ஔவை
ஐயப்படாமல் அடுத்தவர்க்குச் சில கவளம் அன்னம் கொடுத்து
உண்பது ஏற்றம் அருளை இங்கே குறித்துச்சென்னவர் ஏற்பது
இகழ்ச்சி என்று முறைந்தே மற்றவரிடத்தில் இரத்தலை வெறுத்தார்
இ∴தேன் ? என்பதை உன்னிப்பாய்க் கருதுதல்
இகமீதில் அனைவர்க்கும் கடமையதாகும்
இவ்வழிகளை மொழிகளை அலசிப் பார்ப்பின்
இன்று நடப்பதை எங்ஙனம் ஏற்க முடியும்?
வீடு தோறும் கடைப்படிதோறும் பஸ்களிலே சோடனையாய்ப் பாடி
இரந்து பிச்சை கேட்பர்
உடல் ஆற்றலுள்ளவர்களும் காரணம் கூறி
வாடியே நின்ற படி கரத்தை நீட்டுவர்
வருத்தம் இன்றி உழைப்புப் பெற்றிடல் நாட்டம்
வகையற்றவர் என்றிடல் ஆகா வங்கியில் இலட்சம் பல.

- பேனா

# 59 கனிவாகக் கழித்திடுக!

வாழ்வில் வையகத்துடன் எல்லாம் முற்றுப் பெறுமா?
வாழ்வு மரணத்தின் பின் உளதா? கண்டிடல் அவசியம்
மதங்கள் மனிதனை நல்வழிப்படுத்தியே நிற்பன
மற்றொரு வாழ்வு உண்டென மதங்கள் பகர்கின்றன

உலகில் யாவும் அழிந்தே படும் உண்மை
உயர்ந்த வாழ்வும் ஒருநாள் மறைந்திடும் என்பது கண்கூடு
உயிர் பிரிந்து உயிரினம் மரணதத்தை தழுவிடும் என்பதால்
உயிர் எங்கே சென்றிடும்? என அறிந்திடல் தேவை

மனித அறிவுக்கு எட்டா நிகழ்வுகள் இன்றும் உளவே
மாண்புறு ஆய்வுகள் நிகழ்ந்தேறி நிற்பினும்
மனிதனின் விஞ்ஞான ஆய்வுகள் கூறமுடியாதவை உளவாம்
மெய்ஞ்ஞான அறிவினால் தேர்ந்திட முனைந்திடல் நன்றே!

வானம் எவ்வாறு நிலை பெற்று நிற்பது?
சூரியன் பூமி எங்ஙனம் சுற்றிச் சுழல்வது?
சுமையாகச் சிந்திக்க அனந்தம் உள்ளனவாம்
சுவையான விளக்கம் விஞ்ஞானம் தந்திட்டால்

காற்றின் பயன்பாடு விஞ்ஞானம் செல்லுது தான்
காற்றின் முதல் தோற்றம் எவ்வாறு? என்பதை அறியோம்
பூமியின் தோற்றம் ஆய்வு வடிவினில் விரிவாகக் கற்கிறோம்.
பூமியின் பூர்வீகமன்று. ஆரம்பம் – முடிவு தெளிவுதான் உண்டா?

மரணத்தைத் தடுத்திட மனிதனால் முடியுமா?
மண்ணில் வரும் நோயையே தடுத்திடல் ஆகாது
கண(ம்) வாழ்வு மறைவதை எஞ்ஞான்றும் சிந்தித்தே
கனமான வாழ்வதனைக் கனிவாகக் கழித்திடுக!

– ஜீவநதி

# 60 மனித மனம்

மனம் தூய்மை ஆயின்
மானிட உடல் செயல் யாவும்
மாண்பாய் தூய்மை காணும்
மகாத்மாக்கள் இவ்விதமாக
மகத்துவம் பேணி வாழ்ந்தமை காண்மின!
அகத்தில் உண்மை ஏற்றிட வாரீர்!

எம் மனம் ஆசை மோகத்துள்
எஞ்ஞான்றும் மூழ்குதல் செயலாய்
வஞ்சகம் கொண்டு உடல் செயற்படுதல்
அஞ்சி நிற்காது பொய்யுரைத்தல்
கஞ்சத்தனம் காட்டி ஆங்கே
கொஞ்சிக் குலவுதல் நித்தமும் காணீர்!

இத்தகு மனம் எக்கணமும் பெரும் பிழை
எத்தனங்களைச் செய்ய வைத்தல் தகும்
தத்தமது மனம் போன போக்கில்
உத்தமர் செய்வரா? ஓர்மின்!
எத்தகு பகுத்தறிவைப் பெற்றிடினும்
சுத்தமாய் அதன் வழி ஒழுகுதல் காணோம்

மனித மனம் பகட்டைக் காட்டும்
புனிதம் தேடிச்சென்றிட முன்வரா
அநியாயம் நிகழ்த்தியும் பெருமை காணல்
அநித்திய உலகில் செருக்கில் நிமிர்தல்
ஏனிது?என்று உற்றுப் பாராது
காணும் செயல்களில் மூழ்கித்திளைக்க வைக்கும்

*- ஜீவநதி*

# 61 காலம்

கணந்தோறும் காலம் விரயமாகிவிட்டது
காலத்தோடு நாம் பயணிக்கின்றோமா..?
நேரம் ஆக ஆக வலைமீனும்
பழுதடையுது
உடன் கறிக்குச் சமைத்திடல்
அத்தியாவசியம்
உபதேசம் இஃது காலத்தோடு விரைந்து
செயல்படத்தான்
காலத்தை நகரவிட்டு நாம்
கோட்டை விடுவதா?
ஆயின் நம்மையறியாது
முதிர்வும் தட்டிவிடும்
முன்னேற்றம் வேண்டுமெனில்
வேகமாய் எழுந்திடுவீர்
கறந்த பால் மீண்டும்
முலை புகுவதில்லை
சிந்தித்துத் தெளிவு பெறுவீர்
பருவத்தே பயிர் செய்வீர்

- *சிறகுகள்*

# ௬௨ முன்னோரைக் கனம் பண்ணு...

முன்புற்றோர் சாதனைகள் தேடி அறிந்து
முழுதுமாய் முன் வைத்தல் அவசியம்
முன் நடந்தவாறு வழி உற்றுணர்தல் தேவை
இன்றுள்ளோர் அவற்றை ஏற்றிப் போற்றுதல் உத்தமம்
எனினும்

இன்றுற்றோர் முதிய தலைமுறையினர் பற்றியேனும்
உயர்த்துரை முனைகின்றனரா? அன்னோர்களை
வெட்டிக் கழித்து அவர் முதுகில் ஏறியே நின்றிடுவர்
முதியோரை மதி! இளவலர் மேல் நேசம் காட்டு!
இது இஸ்லாம் நெறி ஆயினும்

சிறு குற்றம் கண்டு பெரிதாக்கி அன்னவரைத் துயரில் ஆழ்த்துவர்
பெருந்தவறு செய்தாரைக் காணாமல் விட்டிடுவர் ஈங்கு
பருவ காலம் தப்பி நின்று பெருமழை வெள்ளக் காடாயிடவும்
கர்வம் அகன்று படிப்பினை பெற்றிடவும் இஃதும் காரணமோ?

மனித வாழ்வு சொற்பம்! மாண்புறும் வகையில் வாழ்ந்து
மண்ணுலகில் கழித்து மீட்சி எவ்வா றென்றே கண்டு
ஏங்கி நின்று இறையை ஏத்துதல் எம்மை ஈருலகிலும்
ஓங்கி நிற்க வைத்திடும் திண்ணம் அறிவீர்!

- நவமணி

# 63 ஷைத்தானுக்கு எதிரான போராட்டம்

மனமே மனித மனமே!
ஷைத்தான் உன்னில்
இடம் பிடிக்க முனைகிறான் கவனமாய் செயற்படு
இப்படித்தான் இவ்வாறுதான் என்றில்லாது
மனத்தில் குதிரை ஓடுகிறது ஷைத்தான்
நினைப்பதெல்லாம் செய்திடத் துணியாதே!
நினைப்பதில் சரியானதைக் கண்டுகொள்
அதனை மாத்திரம் செயல்படுத்தத் துணிந்து நில்!
பொறாமை, பொய், பாதகம், அட்டூழியம்
படித்தவர் மனதிலும் பற்றத்தான் செய்கிறது
ஷைத்தான் விளையாடிப் பார்க்கிறான்
"ஜிஹாது செய்து அடக்கி விடுகிறான்
அறிவுள்ள பண்பாளன்
அவனையும் வீழ்த்திட ஷைத்தான் முஸ்தீபு...
சில கணம் அவர்களிலும் சிலர் தம்
நிலை தளர்ந்து வழி தவறிவிடுவதும் ஆகலாம்...
இவ்வாறு அநியாயங்கள் நிறைய நடக்கின்றன
இறைவனிடம் இவை தண்டனைக்குரிய குற்றங்கள்
எஞ்ஞான்றும் எப்பொழுதும் மனம் சொன்னபடி
ஏகனை அஞ்சாது நடந்தால் நட்பேறு கிட்டாது
எடுத்தெறியப்பட்ட ஷைத்தான்
வஞ்சனை காட்டி மனிதனைக் கெடுத்து
இறைவனின் ஏவலில் குறுக்கிடுபவன் ஆயினன்
"இபாதத் செய்யவிடாமல் தடுக்கிறான் அவன்
அடுத்தவர் நலன் கண்டு பொறாமைத் தீயை மூட்டுகிறான்
அநியாயம் விளைவிக்கத் தூண்டியே நின்றிடுவான்

எவரெவரும் நல்லது செய்ய விடமாட்டான்
இதனால்தான் “பெரிய ஜிஹாது செய்யப் பணித்தனர் நபிகளார்
ஒவ்வொருவரும் தம் மனத்துடன் போராடுங்கள்
நல்லதை நாடி நல்லதைச் செய்யத் துணியுங்கள்
“இஸ்லாம் அங்குதான் நிலை பெறுகிறது
எழுந்திடுவீர்!
விழுத்துக் கொள்ளுங்கள்
உறுதியுடன் போராடுவோம்!
தயாராகுங்கள்
மனத்துள் நுழையும் ஷைத்தானைப்
புறமுதுகு காட்டி ஓடச் செய்வோம்!

- எங்கள் தேசம்

## "வெலிப்பன்னை அத்தாஸ்"
## அவர்கள் இதுவரை வெளியிட்ட நூல்கள்

1. "உணர்வூட்டும் இஸ்லாமிய கீதங்கள்" (1969)
   (இளங்கலைஞன்)
2. "மர்ஹூம் எம். எம். எம். யூசுப் நினைவு மலர் (1986)
3. "சிந்தனைப் பார்வைகள்" (2003)
4. "பூவும் கனியும்" (சிறுவர் பாடல்கள் - 2012)
5. "தியாகம்" (சிறுகதைத் தொகுதி - 2014)
6. "உன்னத வாழ்வு" (கவிதைத் தொகுப்பு - 2016)

ISBN : 978-955-4956-01-8

9 789554 956018

